பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க. ...பிரதி விலை அணா ஒன...




| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 | |
| 6 மாத சந்தா ,, ... | ரூ 1-12 | |
| வெளிநாட்டிற்கு ,, ... | ரூ 4—0 | |

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ தனி விகிதமும் உண்டு.

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-ஆ பங்குனி-மீ 28-உ (10—4—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 50.


# மின்சார ரசம்.

## எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது.

**மின்சார ரசத்தின் குணம் எப்படி?**

இது ஒரு அபூர்வமான! சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சாக்குகள் இதில்கிடையாது

**மின்சார ரசத்தின் விசேஷமென்ன?**

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அனுபானமுமில்லை. எவ்வித பத்தியமுமில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும்பயமின்றி உபயோகிக்கலாம்.

**மின்சார ரசத்தின் அனுபோகம் எப்படி?**

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

**ஒரு புட்டியின் விலை ரூ 2. தபால் செலவு வேறு.**

**மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம் (S. I.)**

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.

# மூடமந்திரத்தந்திரம்.

(சிவசம்புசாமி எழுதுவது)

அருளே திருமேனியாகவுடைய கடவுள் எங்கும் நிறைந்தவர், என்றும் உள்ளவர், எல்லாம் வல்லவர். உலகம் உயிர்கள் அனைத்தும் அக்கடவுளின் அருள் வடிவேயாகும். அவர் தமது மக்களாகிய உயிர்களிடத்துச் சிறிதும் வேற்றுமை காட்டுவதே இல்லை. அவருடைய அருட் சந்நிதியில் அனைத்துயிரும் சமமே. அவ்வவ்வுயிரின் வினை அளவுக்கே வெவ்வேறு வகையான இன்பதுன்ப நுகர்ச்சிகளை வேண்டிய மட்டில் காலம் பார்த்துக் கொடுத்துப் பக்குவப்படுத்தி மேன்மேல் நிலைக்கு மெல்ல மெல்லத் தூக்கி எடுக்கின்றார். அவர் மாட்டுப் பாரபக்ஷம் இல்லவே இல்லை. நினைக்கும் நினைவுக்குந் தம் நேர்மையாக நடத்துகின்றார். உயர்வு தாழ்வு என்னும் வேற்றுமை அவரது அருள் முன்னிலையில் எக்காலத்தும் எக்காரணம் பற்றியும் அணுத்துணையும் இடம் பெறாதென்பது திண்ணம். அவர் கண்ணின்றிப் பார்க்கின்றார், காதின்றிக் கேட்கின்றார், மூக்கின்றி முகர்கின்றார், வாயின்றிப் பேசுகின்றார், நெஞ்சின்றி நினைக்கின்றார்; கையின்றிக் கொடுக்கின்றார், காலின்றி நடக்கின்றார். நாம் கண்ணிற் காண்பது அவரது திருக்காட்சி, கைகளால் தொழில் புரிவது அவரது பூசை, கால்களால் நடப்பது அவரது கோயில் வலம் வரல், வாயாற் பகர்வது அவரது திருமந்திரம் அவ்வப்போது மெய்யறிஞர்(உண்மையுணர்வுடையார்க்கு விளங்கிக் கொண்டேயிருக்கும். எல்லார்க்கும் அவ்வுணர்வு நிலைக்காமற் போகாது. நாளடைவிலே அவரது திருவருளால் வந்தே தீரும். ஆனால் எல்லாமக்களும் ஈடேறி விட்டால் எங்கட் பிழைப்புக்கு இழுப்பு வந்து விடுமென்று நன்கே கொணர்ந்து நுழைத்து வைத்த பிழைக்கும் வழி ஒன்று. அது பிழைப்பின் வழியேயாயினும் பார்ப்பனர் சூழ்ச்சியால் வளர்ந்து வலுத்து வேரூன்றி நிலைத்துப் பூத்துக் காய்த்துப் பழத்தையுந் தந்து கொண்டேயிருக்கின்றது. அதனின்றுந் தப்பித் துய்யத் தக்க வழியைத் தேடிக்கொள்ளவும் விடாமல் பிணித்து விட்டனர் பிராமணர். குருட்டு நம்பிக்கையால் மட்டும் அவருக்குத் தம்மிடம் போட்டுக் கொட்டிக் கொடுத்துக் கெட்டுப்போன பின்னரும் அவரது திருட்டு எண்ணங்களை, திருட்டுப்பேச்சுக்களை, புரட்டுச் செய்கைகளை, போலிக்கொள்கைகளைத் தெருட்டி அறிவித்து வெருட்டிவிடவோ தெற்றென வுணர்ந்து நீங்கி விடவோ அறிவும் ஆற்றலும் குறைந்த நிலையிலிருந்தபடியால் மறந்து செத்தவர்போல வாளா அடிமை வாழ்வை மயங்கிக் கைக்கொண்டிருந்தனர், விழித்தனர், விழிக்கின்றனர், விழித்து விடுவார் வெகு விரைவிலே.

அழுத்தமான சமயப்பற்றுடைய பழுத்த பழமேபோலக் கட்டிக்கொண்டிருக்கும் படித்த தமிழரும் மந்திர மாயத்தில் சொந்த மதியை யிழந்து சிக்கித் தவிக்கும் போது கல்வி கேள்வி அறிவுகளில் எளிய தமிழர் என் செய்வார்! பொல்லாத தொத்து நோய் நில்லாத ஆக்கையையும், ஆவியையும் கொல்லாமற் கொல்கின்ற கொடுமைதான் என்னே? கூறுங் காத்ததோ? மாறுங்காத்ததோ, மீறுங்காத்ததோ? மீறுக, மீறுக. மாறு கொண்டடிக்க மாறும், மாறும். கூறு கூறாக வேறுபடுத்தித் தொலைத்து விடலாம். எத்துப்பிணி (ஏமாற்றத்தனை) யாகிய தொத்து நோய்க்குக் கூற்றுவன் வந்தனன் மாற்றிவிடுவான்; மயக்கச் சேற்றில் ஆழ்ந்து கிடந்த தமிழ் மக்கள் ஒற்றுமை இயக்கம் பேற்றில் உறுதி பெற நிற்குங் காலம் நணுகியது. நமக்குள்ளே காணும் போலிச் சாதி மத வேற்றுமைகளைப் பாற்றிவிடின் தமிழ் மக்கள் அனைவரும் சந்தேகமில்லாமல் பிணி நீங்கிப் பீடு பெற வாழலாம். எல்லாம் வல்ல கடவுள் எண்ணிய வண்ணம் திருவருள் புரிந்தாள்வார். ஆனால் பொய் நம்பிக்கையும் போலிக்கொள்கையும் புகைந் தெரிந்து சாம்பலாய்ப்போன காலத்தில் திட்டமாகவே கிட்டி நிற்கும் திருவருள், எட்டிப்போகும் பிறவெல்லாம். எல்லாம் அறிவனுக்கு ஆரியம் ஒழிந்த மற்ற மொழிகள் தெரியாது! உள்ளக் குறிப்பை உணர்பவர் தெள்ளத் தெளியச் சொல்லுஞ் சொல்லைத் தெரிந்து கொள்ளாரா? மந்திரக் கருத்தும், அருத்தமும் தெரியாமல் உருத்தப்பட்டுச் செபித்தாலும் திருத்திக்கிடமாய்ப் பொருத்தமான பலன் கிடைக்கின்றதா? மேலும் மூடமந்திரமாம், மறைபொருளாம், உயரிய ஒருவர்க்கே உரியதாம் தந்திரமாக மந்திரமும், அதன் பொருளும் அவைதரும் பலனுந் தங்களுக்கே சொந்தம், மற்றவர்க் கதில் சார்பேயில்லை யென்று சாற்றுங் குருக்களார் பாழும் வயிற்றின் கொடுமையால் தாழ்ந்தோரென அவரால் எள்ளி நகையாடப்பெறும் தமிழரிடத்து வந்து வீழ்ந்து கெஞ்சுவானேன்? மந்திர மூலமாகத் தேவர்களைக் கேட்டு வாங்கிப் பிழைக்கலாமே, அத்தேவர் விண்டேவா, இப்பார்ப்பார் மண்டேவா. இம்மண்டேவர் வள்ளல்களாகிய தமிழரை அண்டி, கொண்டிச்சாக்குப் போக்குக் காட்டி மண்டை வெடிக்கப் பேசி கண்டவற்றை யெல்லாங் கைநிறையக் கொண்டுபோய் வேகவைத்துத் தொண்டை கிழியத் துறுத்தித் தள்ளிப் பண்டியை நிரப்பிப் படுத்துத் தூங்கும் பாழ்மக்களன்றோ? எனக்குக் கொஞ்சம் பழயசாதம் போடு உனக்குப் பச்சையா வரந் தருகிறேன் என்பது போன்றதல்லவா இது.

பூசுரர் என்று சொல்லிக்கொண்டு பொழுது போக்கும் அசுரர் (ஆறலைக்குங் கள்வர்) பேசுமந்திரப் பெருமையினாலே ஆசில் பலனை அடைய முடியாதா? வெற்றி மந்திர வீரம் பேசும் வீணர்—சொற்ற தந்திரச் சூழ்ச்சியுடைய மாணார்—நல்லறம் பேணார். என்ன உதவி எமக்குச் செய்வார்? இம்மைக்காகுமா? மறுமைக்காகுமா? எம்மைக் காக்கும்? மும்மைக்கும் ஆகாது. தம்மையே பேண எம்மைத்தட்டிப் பறிக்கும் நன்மை யறியா வெம்மையர் எம்மட்டில் ஏற்றமுடையவராவர்? ஐயையோ! வெய்ய சூரியன் வெப்பத்தில் வெதும்பி மயங்கிக் கண் பிதுங்கிக் கருகினாலுங் கருகலாம் ஐயன்மார் பொய்யிலே அகப்பட்டால் கையறவெய்தி நைய வேண்டியதுதானே. ஐயமில்லை. "மந்திரம் நினைப்பவரைக் காப்பது" என்னும் பொருளில் அமைந்தது. அதை உருவேற்றினால் அம்மந்திரத்திற்குரிய அதிதெய்வம் வந்து அருள்புரிந்து காக்கும்" என்று கழறுகின்ற பார்ப்பனர் காற்பணத்திற்குக் காதவழிதூரம் காலடி புட்டத்திற் படும்படி ஓடியலைகின்றனரே! அந்தத்தேவதை எங்கே? மந்திரம் எங்கே? வீணே அலையவா விட்டு விட்டது மெய்யாக நம்பி உய்யு நெறியிலே சென்றால் உதவி கிடைக்காதா? உள்ளத்திலே கள்ளமும், உதட்டிலே பேச்சும் உடைய மண்டேவரே திண்டாடும் போது அவரைக் கொண்டாடும் தொண்டர்கள் பாடு எப்படியிருக்குமோ? இயற்கை இன்ப விளக்க அருளே அறியும், அந்தமந்திரங்களுக்கோ நாம உரியரல்லேம். உரியாரோ கிறிபேசி வெறி மீறிக் குடிபார்த்து விரைந்தலையும்போது உரியரல்லாத நாமோ தறிபோலத் தங்கியிருக்கவேண்டியதுதானே. வேத மந்திரம் வெகு பொல்லாத மந்திரம். சொன்னால் நாவழுகிப்போம், கேட்டால் காது கெட்டுப்போம், சொல்வதைப் பார்த்தாலும் கண் கெட்டுப்போம். ஆளுக்கே மோசம் வந்துவிடும் அப்படிப்பட்ட மந்திரக்காரர் கிட்டவாவது போகலாமா? ஆகம மந்திரம் அவர்கட்கு உடன்பாடில்லை நமக்கு எந்த மந்திரம்? அவர் தஞ்சொந்தமான தந்திர மந்திரம் மந்திரப்பேய் பிடித்தலையும் நம்மவரை மயக்க உப்பு, புளி, மிளகாய், அரிசி, பருப்பு, அவரைக்காய், பாகற்காய், அத்திக்காய் இத்திக்காய், தவலை, செம்பு, வேட்டி, குடை, செருப்பு முதலியவைகளின் பெயர்களாகிய திருமந்திரங்களைச் சிறப்பாகச் சொல்லி ஆசி கூறிவிட்டுத் திரும்பிப்போய்விடும் தீய சாமிகளா நம்மவரை முன்னேற்றுவர்? தின்று கொழுத்துத் திண்ணையிலே தூங்கிக் கண்டதை யெல்லாம் கேட்டு வாங்கிக் கனக்க முடியும் கயவரா நம்மைத் தூயராக்குவர்? துயரக்குள்ளாக்குவர். ஆண்டவனே! கடவுளே! அம்மை அப்பரே! எல்லாம் வல்ல தனித்தலைமையிறைவரே! என்று கூவி அழைத்து இருக்குங்குறைகளை எடுத்துச் சொல்லிவேண்டினால் விருப்பத்துக்கேற்ப விழுமியதளிப்பார்.

வாயல்லா மொழியாகிய வட (ஆரிய) மொழி மட்டுந்தானா கடவுளுக்குத் தெரியும்? மற்றமொழியொன்றுந் தெரியாதா? தெரிந்திருந்தபோதிலும் ஏற்றுக்கொள்ள மாட்டாரா? ஆரியர் தோன்றுமுன் பேரியற்கைப் பெருமான் இல்லையா? ஆரியர் தானா அவரை உண்டாக்கி உருப்படுத்தி வைத்தனர்? இந்தியா நீங்கிய மற்ற உலகப் பகுதிகளிலே உள்ளவர் எதைக் கொண்டு கடவுளை வழிபடுகின்றனர்? அவர்களுக்கு இம்மை மறுமை இன்பங்கள் இல்லையா? ஆரியக் கடவுள் வேறு. அந்தக்கடவுள்கள் வேறு? ஆரியக்கடவுள் வேற்றுமைக் கடவுளாயிற்றே வேற்றுமையில் விபரீதந்தானே தோன்றும் உண்மைப்புலப்படுமோ? பூர்வ வேதிகளாகிய மீமாம்சகர் நாஸ்திகர்களன்றோ? கன்மத்தைச் செய்து களித்தவர் தாமே அந்தக் கன்மங்களுங் காமியக்கன்மங்களே. சாந்தியின்னதென்றறியாத தறுகணாளன்றோ? பிட்சாடனமூர்த்தி சரித்திரத்தைக் கேட்டால் அவர் தங்கொடுமை

(இதன் தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க)

# நோயாளியும் ஜெபமும்.

நோயாளிகள் வயது, ஆதிக்கம், அவசியம், பணம், காரியார்த்தம் முதலியவைகளை உத்தேசித்து பரிபாலிக்கப்பட்டு வருகிறார்கள். ஒரு குடும்பத்தில் குடும்ப எஜமானுக்கோ குடும்பத்தில் முக்கியமானவர்கட்கோ வியாதி கண்ட சில நாட்களெல்லாம், குடும்பத்தைச் சேர்ந்த பந்து கூட்டத்தில் பெண்வழி ஒரு கட்சியும் ஆண்வழி ஒரு கட்சியுமாகப் பிரிந்து ஒருவர் பேரில் இன்னொருவர் குற்றஞ்சொல்லி, முணு முணுத்து, கோபக்குறியைக் காண்பித்து, அன்னியர் சமாதானத்தை யெதிர்பார்த்து குற்றமெல்லாம் மற்றவர்கள் பேரில் என்னும் திருப்தியால் உலகத்தையும், பந்து கட்டுப்பாட்டில் தன் கோபத்திற்கு வழியில்லாமையுங்கண்டு மற்றெல்லாக் காரியமுமொன்றாகவே நடந்து வருகிறது.

விபாதியஸ்தன் வீட்டில் வேலையதிகம். வியாதியஸ்தனைப்பார்க்க வராதவர்களெல்லாம் வருவார்கள். அவரவர் எண்ணிக்கொண்டிருக்கு காரியங்களை முடிக்க அநேக விவகாரங்கள் சொல்லுவார்கள். வருகிற, போகிறவர்களை அனுப்பவும், அழைக்கவும், உபசரிக்கவும், ஞாயம் பேசவும்; சம்பந்தி உபசரணை சமாதானம், சாமான் வாங்கவும், கொடுக்கவும், பாழாக்கவும், சண்டைபோடவும், ஊராரை மெய்ப்பிக்கவும், நாட்டாருக்கு நல்லவராகவும், சிலருடைய பயத்திற்கும் சில நடையவேண்டியோருக்கும் சிலருடைய தாட்சண்ணியத்திற்கும் ஓமம், செபம், மந்திரம், வைத்தியம் ஆகியதுகளைப்பற்றிய எல்லா ஏற்பாடுகளும் அங்கு இருக்கும். அதுகளைப்பற்றிய வாதப்பிரதிவாதங்களும் நடைபெறுமே யொழிய வியாதியஸ்தர்களுக்கு அவசியமானது அங்கு அநேகமாயிருக்காது. பணக்கட்டுடைய ஜனக்கட்டுமுடைய நோயாளியைச் சுற்றிலும் அநேக அபிமானிகளும், சிப்பாயிகளும், சோற்றையும் வெற்றிலைபாக்கையும் வேலைக்காரனையும் கொல்லும் வீரர்களும், "நான் நினைத்தால் என்ன முடியாது! இந்தமலையை அப்படியே பெயர்த்துவர ஆள் விடட்டுமா!" என்று ஒருவரும் "நீங்கள் ஆள் விடவேண்டாம் "என் மோட்டாரை அனுப்பினால் எல்லா வைத்தியனையும் குடுமியைப் பிடித்துக்கொண்டுவந்து விடுவார்கள்" என்று ஒருவரும், "நானெதற்காக அனுப்பவேண்டும்! என்னுடைய ஆள் போனானானால் பெருமாள் கோவில பூசையை இரண்டு நாள் நிறுத்திவிட்டுக் கோவில் அப்பங்காரையும் சிவன் கோவில் அய்யரையும் நாலு நாள் பூஜையை ஒன்றே முடித்து விடும்படியாகச் செய்து அந்த அய்யரையும் கூட்டிக்கொண்டு வந்து விடுவான்" என்று ஒருவரும், "அய்யர் வந்தால் அவர் பாட்டிற்கு அவர்வேலை நடக்கட்டும். பட்டணமே போய் விட்டால் தான் விசேடம். நான் அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்கிறேன்" என்று ஒருவரும் "உங்களுக்கெல்லாம் இவ்வளவு அவஸ்தை வேண்டாம், நான் சாப்பிட்டுவிட்டுத் தாசில்தாரைப் பார்க்கப்போவேன், போய் எல்லா ஏற்பாடும் செய்து விட்டு வந்து விடுகிறேன்" என்று ஒருவரும்; "பொறுங்கள், நாம் எந்தக் காரியம் விசாரித்தால் முடியாது! சம்பந்தி இன்று வருவதாக ஆள் வந்திருக்கிறது, அவர் வந்தவுடன் ஆலோசித்துக் கொள்ளுவோம்" என்று ஒருவருமாக இந்தவிதமாய் அங்குள்ள பிரபலஸ்தர்கள் பேசுகிறார்களே ஒழிய வியாதியஸ்தர்மீது ஈ மொய்ப்பதும், எறும்பூருவதும், அவன் எச்சிதுப்புவதும், தாகத்திற்கு வேண்டிய பக்குவத்தண்ணீர், வியர்வை துடைத்தல், விசிறி வீசல், கால்கை நெருடுதல், அமுக்கல், ஆறுதல் சொல்லல், கூட்டம் இம்சித்தலைத் தடுத்தல், இதுபோன்ற இனியும் சமயத்திற்குத் தகுந்த உபசரணையில்லாமல் அவன் படும்பாட்டைக் கவனிப்பதற்கு ஆளிருக்காது. இராக்காலத்தில் நோவும் அதிகம் கவனிப்பும் தூக்கத்தில் மூடிவிடும். பின் கட்டிலோ வென்றால் எஜமானுக்குப் பின் எஜமானிக்குப் பட்டமானதால் அப்பட்டத்திற்கு வேண்டிய அலங்காரத்திற்குக் கூட்டமும், பேச்சும், நடக்கிறதே ஒழிய நோயாளியின் அழுக்குப் படுக்கையை அப்புறப்படுத்த ஆளில்லை. அந்த மந்திராலோசனை சபையில் படுக்கை உடை அழுக்குகளை அப்புறப்படுத்தும் விஷயம் முதல் வேலையல்ல. எவ்வளவு செல்வாக்குடைய நோயாளியாக இருந்தாலும் ஒரு சம்பள ஆளோ வயிற்றுச்சோற்று வெட்டியாளோ துணையாளியாக வைக்கிறார்கள். அவர்கள் புத்தி எப்படி இருந்தாலும கவலையுடனும் விஸ்வாசத்துடனும் வேலை செய்கிறார்கள் வியாதியஸ்தரை நடக்கும காரியாதிகளை கண்ணில் பார்த்தும தன் பணத்தாலும் கூட்டத்தாலும் தனக்கு அவசியம் வேண்டியதுகள் இல்லாதிருந்தும் வருத்தப்படும் கஷ்டப்பட்டும சாகிறானே ஒழிய பக்கத்திலிருந்து தனக்குத் தொண்டு செய்யும் வேலைக்காரனுக்கு ஒரு உதவியும செய்ய மனம் வருவதில்லை. திருப்பதிக்கும பழனிக்கும் கட்டளை ஏற்படுத்தவும் பக்கத்திலிருக்கும் கூட்டத்தார் சொல்லுவார்கள். கடவுளுக்கு கட்டளை ஏற்படுத்தாவிட்டால் கடவுள் நமக்குச் சாபமிடமாட்டார். பாடுபட்ட ஏழைக்கு உதவாவிட்டால் சாபம் தானே வரும். அநேக கட்டளை அபிஷேகம செய்த குடும்பம துன்பத்திலிருந்து மீளாததற்கு இதுவே காரணம். மரண காலத்தில் உபசரணையும் தண்ணீரும் கொடுக்கக்கூட பக்கத்தில் ஆளில்லாமலும செத்த பணக்காரர்கள் அனந்தம! இதற்கெல்லாம காரணமென்ன! நம்மைச் சரியான மார்க்கத்தில் பழக்கவில்லை. நமமுடைய புத்தியைப் பெரிதாக நினைத்துக் கொண்டோமே ஒழிய விசாரணையில்லை. ஜீவகாருண்ய மென்பது இன்ன தென்பது நமக்குத் தெரியாது ஒருவருக்கொருவர் வெறும் தாட்சணயப் பேச்சு எல்லாம் அபிநயம். எதற்கும் போலி சமாதானம் ஆனால் வெள்ளைக்காரர் வழக்கமோ இப்படியில்லை. ஆஸ்பத்திரி இருக்கிறது அங்கேயுள்ள சௌகரியம் போல் திருத்தியுங் கொள்ளலாம். தாதியுமிருக்கிறாள். ஆஸ்பத்திரியில் உபசாரணை மருந்து ஏதேனும் சரியாய் இல்லாவிட்டால அதைப்பற்றி விசாரிக்கவும் சரியாய் நடத்திக்கொள்ளவும் அவர்கட்குத் தெரியும். நம் நாட்டில் சரியான ஆஸ்பத்திரியுமில்லை. போவதும் குறைவு பணம் கொடுத்து ஆஸ்பத்திரி கட்டுகிறவர்களுமில்லை. ஆஸ்பத்திரியில் அக்கிரமம் நடந்தால் கேட்பாருமில்லை. கேட்கச் சங்கதியும் தெரியாது. தாதிகள் அதிகமாகவுமில்லை. வழக்கமும் அதிகம் பரவவில்லை, எந்தச் சுரம் வந்தாலும் டாக்டர்கள் பரிசோதனையில் சந்நிபாத சுரமாகவே தோற்றுகிறது. முருங்கப்பட்டை, வேப்பம்பட்டை, மிளகு, கடுக்கா கஷாயத்திலும் அதிகமானல் விஷமாத்திரையாலும் தீர்ந்து கொண்டிருந்த சுரம் இப்போது 100, 500 ரூ. செலவு செய்தால்தான் போகிறது. சாதாரண வீட்டில் கூட பத்து நாள் சுரமடித்தால் 50, 100 வேண்டியிருக்கிறது. மத்தியில் சோதிடன் வருகிறான். "வயது ஐம்பத்தேழாயிற்று. சனிதிசையில் செவ்வாய் புத்தி, மாரணம் மரணமே. என்றாலும விபாழன பலவான் சாந்தி செய்தால் கண்டம் நீங்கும். அதற்காக நவக்கிரக செபம் மிருத்து சாந்தியும்; ஆயுசு ஓமமும்; செய்து விட்டால் கண்டம் நீங்கி விடும்" என்று சோதிடனே புரோகிதனே சொல்ல அப்படியே எக்கிய ஓமம ஆரம்பிக்கப் படுகிறது நேற்றுண்ட அன்னம ஜீரணமாகாமல் திண்ணையில் இன்றும் உறங்கும் பார்ப்பனரெல்லாம் வரவழைக்கப் படுகிறான். ஓமம் வளர்க்கப்படுகிறது. நெய் பாழாகிறது அவனுக்கு வேண்டிய சாமான் மூட்டை கட்டப்படுகிறது. சாப்பாட்டில் பந்து விதத்திற்குக் குறைவில்லை. இரண்டு வேளை காப்பிக்குங் குறைவில்லை. மிருத்திஞ்சய ஓமமும் நடக்கிறது. எல்லா வேலைக்காரருக்கும் ஓமத்தின் வேலையே சரியாயிருக்கிறது நோயாளிக்கு மருந்து கொடுக்காமலும் தீர்ந்துபோன மருந்தை திரும்பப்போய் வாங்கிவரவும் பத்தியங் கொடுக்கவுமுள்ள ஏற்பாடுசரியாய் நடக்காமலும் நோயாளி ஓமகுண்டத்திற்கு அழைக்கப்படுகிறான். நோயாளிகளுக்குச் சக்தியில்லை. வைத்தியர் நடக்கக்கூடாதென்றார். ஓமத்தை அங்கு கொண்டுபோங்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படியே முக்கிய புரோகிதன் கற்பூரதீபமும், பூவும் தண்ணீயும் கொண்டுபோய்த் திரும்பி வருகிறான். மற்ற பார்ப்பனர்கள் அவனைப் பார்த்து "ஏங்காணும் முகம் வாடியிருக்கிறது? அங்குள்ள நிலைமை என்ன?" "கொஞ்சம் தேவலாம்" "அதேதான் முகம் வாடி விட்டதோ! பசு தானம்போய்விட்டதென்கிற வியாகூலமா" இன்னொருவன் "இல்லை இல்லை. வைத்தியன் பிழைக்காது என்று தீர்மானம் சொல்லியிருக்கிறான். நம் காரியம் அவ்வளவு மோசமாகாது. எப்படியும் பசு கிடைக்கும் அதை நமக்கே கொடுக்கும்படியாகச் செய்து கொள்ளலாம். எதற்கும் நம் சேஷனிருக்கின்றான். அவன் சொல்வது போல்தான் அவர்கள் கேட்பார்கள். சேஷனை நாம் பின்னால் சந்தோஷப்படுத்தி விடுவோம் சங்கடப்படமாட்டானு? பசுகிடைக்காதா? சாகமாட்டானு? பசு வராதா? யாரைப் பிடித்துத் தானத்திற்கு ஏற்பாடு செய்யலாம்? ஆகியதுவே தான் பார்ப்பனன் மந்திரமும் ஓமமும். இந்த பாவிகள் செய்யும் மந்திரத்தில் ஏதாவது பலனுண்டா? தானத்திலும சோற்றிலும் யாராவது பிழைப்பார்களா? சிறிதாவது நாளுக்கு நாள் குணம் கிடைக்கவேண்டுமென்று வைத்தியனும் வீட்டாரும் பாடுபடுகையில் "குணமாகிறதே! மாடு போச்சே! பிழைக்கப்போகிறானே! தானம் போச்சே" என்று நினைக்கும் பார்ப்பானைத் துக்கொண்டு ஜெபம செய்யும் ஹோமம்வர்களே! இது செய்யாமல் செத்தவனில்லை. வைத்தியமும் பக்குவமுமில்லாமல் செத்தவர்கள் இருக்கலாம். எல்லா தேசங்களிலும் வியாதியஸ்தனுக்கு வைத்தியமும் பக்குவமுமே பெரிதாக இருக்கிறது. நம் நாட்டிலோ முட்டாள்தனமான—அர்த்தம் இல்லாத காரியம் நடை பெறுகிறது.

இந்தப் பார்ப்பானிடம் காரியஸ்தர்கள் விசாரணையில் "மந்திரம், மந்திரம் பாட்டிற்கும் ஓமம், ஓமம்பாட்டிற்கு நெருப்பு, நெருப்பு போட நெய் செய்யோ எல்லாம் சரியாய் நடக்கிறது" ஆனால் இந்த ரவையில் பூச்சிக் கூடு இருக்கிறது. நாட்டு ரவை கொடுத்தனுப்புங்கள். காலையில் உப்புமா காப்பி சாப்பிடாவிட்டால் மந்திரம் உருப்போட முடிவதில்லை. சாப்பாட்டிற்கு ஒரு மணி ஆகிறது. செய்பவர்கள் மயங்கி விடுகிறார்கள். நான் ஓமகுண்டத்தண்டை இருப்பவனானபடியால் மத்தியானம் கொஞ்சம் டீ சாப்பிடவேண்டும். அதற்குத் தனியாகக்கொஞ்சம் பாலும் நெய்யும் அனுப்புங்கள். நவக்கிரக ஜெபத்திற்கு பிரதிபிம்பமாகப் பிரதிஷ்டை பண்ண ஒன்பது பேர் வருகிறார்கள். அவர்களுக்கு சாப்பாடுகொஞ்சம் விசேஷமாயிருக்கவேண்டும்" என இந்த மாதிரியெல்லாம் சொல்லி எவ்வளவு சதை உண்டோ அவ்வளவு தூரம் கத்தியைப் பாய்ச்சி விடுவார்கள். இவர்கட்கு அந்நியர் கஷ்டம் தெரியாது. ஈவிரக்கமில்லை. இவர்கள் ஜெபத்தால் நோயாளி பிழைப்பானு மாட்டானு என்று தெரிந்தாலும், செய்யவேண்டியதை செய்தே தீரவேண்டுமென்கிற முட்டாள் எண்ணமும், அறிவற்ற செய்கையும் நம்மிடமிருக்கையில், பார்ப்பானுக்கு என்ன குறைவு? ஜெபம் செய்கிறவனுக்

## நாட்டின் வறுமை.

அருப்புக்கோட்டை சொக்கலிங்கபுரம் தேவாங்குல முன்னேற்றச் சங்க ஆண்டு விழாவில் ஸ்ரீமான் ஈ. வே. இராமசாமி நாயக்கர் தலைமையில் நாடார்குல பத்திராதிபர் ஸ்ரீமான் சு. ஆ. முத்து நாடார் அவர்கள் நாட்டின் வறுமை என்பது பற்றி நிகழ்த்திய சொற்பொழிவு.

நம் பாரதபூமியானது நீர்வளம் நிலவளம் மலைவளம் முதலிய பலவளங்களும் மேலாக அமையப்பெற்றிருப்பதுடன் சீதோஷ்ண ஸ்திதியும் சகலஜீவராசிகளும் சுகமாய்வாழ்வதற்கேற்ப சிருஷ்டிக்கப் பெற்றிருக்கிறதென்றும் சொல்லப்படுகிறது.

அந்நிய நாட்டினர் பலர் நம் நாட்டைப் பொன் விளையும் பூமியென்றும் தேவ நாடென்றும் கொண்டாடி வந்து குவிந்தவண்ணமிருக்கின்றார்கள் வரமுடியாதவர்கள் நமக்கு அந்த பாக்கியம் கிடைக்கவில்லையே யென்று தவித்து வருகிறார்களென அநேகர் சொல்லக் கேட்கிறோம். இவ்வாறு சுபிக்ஷம் பெற்றிருக்கும் நமது இந்திய மக்களோ இறை தேடிச் செல்லும் பறவைக் கூட்டங்கள் போல, தினசரி வெளிநாட்டிற்குப் புறப்பட்டுப் போய்க் கொண்டிருக்கின்றார்கள்.

என்னென்றால், வறுமை பொறுக்க முடியவில்லை, பிழைப்பிற்கு இடமில்லை என்ற பதில் தாராளமாய்க் கிடைக்கின்றது.

அது உண்மை தான். வறுமையென்னும் கொடிய வியாதி வர வர வளர்ந்து வருகிறது. 1919-ம் வருஷம் ஒரு ரூபாய்க்கு இரண்டு படி அரிசி கிடைத்த காலத்திலிருந்த கஷ்டத்தைப் பார்க்கிலும் 1927 ஆகிய இவ்வாண்டில் ரூபாய் ஒன்றுக்கு மூன்று நான்கு படி அரிசி கிடைக்கும் கஷ்டம் அதிகமாகத் தெரிகிறது. அநேகமான ஜனங்கள் பிழைப்பிற்கு வழியின்றி இடம் விட்டு இடம் மாறிக் கொண்டிருக்கின்றார்கள். நாளுக்கு நாள் வருஷா வருஷம் பொருளாதார நிலைமை குறைந்து வறுமைப்பிணி வெகுவேகமாய்ப் பரவியிருக்கிறதென்பது விளங்குகின்றது.

ஆனால் பணிகள் எப்போதும் ஆகாயத்தில் வெகு உல்லாசமாய்ப் பறந்து திரிவது போல் நம் நாட்டில் பட்டம் பதவி பெற்றவர்களும் சட்டசபைக் கனவான்களுடையவும் மோட்டார் வாகனங்கள் வெகு வேகமாய்ப் பறந்து கொண்டு திரிகின்றன. அப்படிப்பட்டவர்களுக்கு வறுமை அக்கனவான்களுக்காவது ஒருபோதும் வறுமை இல்லை. வறுமையால் வருந்தும் சிறுமையும் தெரிவதில்லை. தலைவலியும் நோவும் தனக்கு வந்தாலல்லவோ தெரியுமென்ற பழமொழிக்கேற்ப வறுமையனுபவித்தவர்களுக்கன்றோ அது தெரியுமென்பது மிகையாகாது.

எல்லா நல்வளங்களும் பொருந்திய நம் நாட்டிற்கு இவ்வறுமை எங்கிருந்து வந்ததென்றால் அந்நிய நாட்டார் ஒப்பமின்றி நம் நாட்டின் செல்வத்தைச் சுரண்டி எடுத்துக் கொண்டு போவதாலும். மத ஸ்தாபனங்களிலும் ஒரு வகுப்பார் அட்டைபோல ஒட்டிக் கொண்டு பிற வகுப்பினரை நயவஞ்சகமாய்க் கொள்ளையடித்துக் கொண்டிருப்பதாலுமே யெனச் சொல்லப்படுகிறது.

“சகலத்வாலா” போன்ற மேனாட்டு மோகினிகள் இக்கொடுமைகளுக்கு ஆதரவாயிருந்து வருவதினாலுமே யென்றும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

எவ்வாறு நம் நாட்டின் செல்வம் சுரண்டப்படுகிறதென்பது அம்மோகினிகளுக்குத் தெரியவே தெரியாது. நம் நாட்டின் இயற்கையமைப்புக்கு மாறான யந்திரப்பிசாசுகள் வந்து குவிந்து கொண்டேயிருப்பதினாலும் நம் நாட்டிற்கும் பிசாசுகள் மீதே அதிக ஆசை மூண்டு கொண்டிருப்பதினாலும் வறுமை பலவாறு தலை தூக்கியாடுகிறது.

நம் நாட்டிற்கு பருத்தியாலை, நூலாலை, நெசவாலைகள் வந்தது கைமில்லை கைராட்டு கைத்தறி விருத்தி குறைந்தது. மாவாலை நெல்லாலைகள் பல வந்தது. நமது பெண்கள் பிழைப்புக் கெட்டது. அவர்கள் பலமும் போய் விட்டது. அவ்வரிசி யுண்பதால் ஆண்களுக்கும் பலமில்லை ... வியாதி யுடையவர்களா யிருக்கின்றார்கள் ... “குடியரசு” சரியான புள்ளி விபரம் போட்டுக்காட்டி வந்திருப்பதைக் கவனித்திருக்கலாம்.

இப்பொழுதோ மோட்டார் வாகனங்களெங்கும் காட்டுத்தீ போல பரவுகின்றது. மனிதருக்கோ காலின் பலம் குறைகிறது. நம் நாடெங்கும் புதுப்புது ரெயில்கள் போடப்பட்டு வருகிறது. இதனால் நமக்கு ஒருவாறு நன்மையே யென்றாலும் இங்கிலாந்துக்கே அதிக நன்மையேற்படுகிறது. அங்கே இரும்புத் தொழிலுக்கு அதிக ஏற்றம் கிடைக்கிறது. நம்மிந்திய ரெயில்வே ஸ்டேஷன்களையெல்லாம் நோக்குங்கள். நம் நாட்டு மரத்திற்குப் பதிலாக இரும்பும், நம் நாட்டுச் சுண்ணாம்பு, மண், கல் இவைகளுக்குப் பதிலாக வெளிநாட்டுச் சிமிண்டும் உபயோகிக்கப்படுத்தப்பட்டு வருகிறது. செங்கல்லும் ஒன்று கூட இங்கிலீஷ் கம்பனிகளிலிருந்து வருவதாய்ச் சொல்லப்படுகிறது. இவ்வாறு இந்திய ரெயில்வே நிலையங்களிலெல்லாம் இந்தியச் சாமான்கள் மறைந்தாய்ப் போய்விட்டது. அந்தோ இது யாருடைய பணம்? இந்தியருடையது. இதனால் யாருக்கு லாபம்? இங்கிலாந்துக்கு. இதனால் தொழில் எங்கே விருத்தியாகின்றது? இங்கிலாந்தில். இதனால் பட்டினி கிடக்க நேருகின்றது? இந்தியர்கள்.

இவ்வியந்திரப்பிசாசுகளுக்கு நம் நாடு ஏற்றதாயில்லை. அப்பிசாசுகள் கோருவதைக் கொடுக்க நமக்குச் சாதகமில்லை யென்பதை யறியாது ஒரு சாரார் பிடித்த பேய்க்கு வகை சொல்லித்தானே தீரவேண்டுமென்று மகாத்மா காந்தியடிகளின் சொற்களைப் புள்ளிகளாய் ஆடம்பரத்தில் மூழ்கின்றமையால், நமது சாதாரண ஜனங்களுங்கூட அம்மோகமே தாகமாய் அனுசரிக்கப்பிரியப்பட்டு வருவதினாலே வறுமையும் பிணியும் நிலைநிற்கப் பிரியப்படுகின்றது. இவ்வறுமையை எவ்வாறு விலக்கலாமென்பதில் தேசம் பலதரப்பட்ட அபிப்பிராய முடையதாயிருந்து வருகிறது.

மகாத்மா காந்தி சொல்லும் நல்வழிகளை சகலத்வாலா தவிர மற்றெல்லோரும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். மகாத்மா காந்தி நம்முடைய செல்வம் சுரண்டப்பட்டு நாம் தரித்திரமடைவதற்கு காரணமாயுள்ள அரசாங்கத்தை நாம் சண்டை செய்து வெல்வதரிது சண்டையால் மண்டை புடைவதும் தகாது. சாத்விக எதிர்ப்பை நாடுங்கள். ஒத்துழையாப் போர் தொடுங்கள். எதிரிகளும் பணிந்து போவார்களென்றார். நம் குடிசைத் தொழிலை விருத்திபண்ணுங்கள். அடிமைத்தனம் ஒழியும். கைராட்டினமும், கைத்தறியும், கதரும் பெருகினால் மானசெண்டர் கொள்ளை ஒழியுமென்றார்.

ஆடம்பரத்தை விடுங்கள் தரித்திரம் தொலைந்சாவான். கட்குடி நின்றால் நற்குடி வளரும். தீண்டாமையை வேண்டாமென வெறுத்துத் தள்ளுங்கள். எல்லோரும் சிக்கனமென்னும் லக்ஷுமியை நேசியுங்கள் என்றார்.

உண்பதொருபடி, உடுப்பது நான்குமுழம், வசிப்பது குடிசை, படிப்பது சன்மார்க்கம் அடைவது மோட்சம் என்பது மனிதன்

இதன் தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.

---

குக் காப்பி, உப்புமா ஆகுமா? அக்கினி குண்டத்தண்டை இருந்தாலும் மழை ஏதற்கு? பாயாசம் வடை மோர்க் குழம்பு உண்டு வயிர் பெருத்தவனுக்கு மந்திரம் பலிக்குமா என்று கேட்பாருமில்லை” கேட்டாலும் “உனக்கு கேட்க அதிகாரமில்லை. நான் பிராமணன் எனக்கு எல்லா அதிகாரமும் வேதத்தில் விதித்திருக்கிறது. உனக்கு அதை கவலையேற்பட்டால் கொடுக்கும் முட்டாளிடம் போய்ச்சொல்” என்பான். ஜெபம் சாந்தி ஓமங்கள் “நோயாளிக்கு நன்மையை உண்டு பண்ணுமென்று சாஸ்திரங்களில் சொல்லப்படுகிறதே” என்றால் நாம் அதை ஒப்புக்கொள்ளுவோமானாலும், யாரால்? எப்படி? என்று அதிலேயே விபரமாய் சொல்லியிருக்கிறது. ரிக், சாம முதலிய வேதங்களையும் அதன் கருத்தை விளக்கும் மீமாம்ஸா சாஸ்திரத்தையும் நன்றாக அறிந்த பிராமணர்களான ரித்விக்குகளுக்கு மணிதர்களுக்குறிய சாந்தி முதலிய கர்மங்களைப் பரிசுத்தமாக நிறைவேற்றுவது மிக்க முயற்சியுடன் செய்யத்தக்க விருத்தியென்று விதிக்கப்படுகிறது. அவர்கள் எப்பொழுதும் நேர எண்ணமும், இன்சொல்லும், எல்லோருடன் சேர்வையும், சற்றிலுமுள்ள கர்மங்களை சமமாகப்பார்க்கும் திறமையும், நல்ல சீலமும், உள்ளவர்களாக இருக்க வேண்டும் குரோதமில்லாமை, வைராக்கியம், லஜ்ஜை, பொறுமை, அடக்கம், நேர்மை, துரோகமில்லாமை, இந்திரிய அடக்கம், ஆகிய இந்த குணங்கள் பொருந்தியவனும், அறிவுள்ளவனும் உண்மையான தைரியமுள்ளவனும், நல்ல பழக்கமுள்ளவனும், ஞானத்தில் திருப்தி உள்ளவனுமான பிராமணன் ஜெபிக்கும் மந்திரம் பலனுள்ளதாகும். யாகமும் ஓமமும் ஜெபமும் முன் சொன்ன குணத்தோடு கூடின உத்தம பிராமணனால் நீதி தவறாமல் உபயோகப்பட்டால் பலன் படும் என்று சொல்லியிருக்கிறது. அவ்விதமின்றி கபட முதலிய குற்றமுள்ள பார்ப்பனனானவன் தன் சரீரத்தின் ஜீவனத்தைக் கருதிச் செய்த பூஜை, ஓமசாந்தி முதலியவைகள் அந்த பிராமணன் படித்தவனாயிருந்தாலும் அவனுக்கும் பிறருக்கும் நற்பயனைக் கொடுக்கத்தக்கதல்லவென்பது வேதத்தினால் கூறப்படுகிறது. ஆகையால் வைத்தியரை மெய்ப்பிக்கவும், தன் மனதையும் நோயாளியின் மனதையும் திருப்திபடுத்திக் கொள்ளச்செய்யும் இந்த காரியங்களில் பணமும் காலமும் வீணே ஒழிய நோயாளிக்கு இதனால் யாதொரு உபயோகமுமில்லை.

---

## காங்கிரசையும் காந்தியடிகளையும் தேசபந்துவையும் தேசமக்களையும் ஒருங்கே ஏமாற்றிய சுயராஜ்யக்கக்ஷிக்கு "ஜே"

சென்னை சுயராஜ்யக்கக்ஷியார் காங்கிரசுக் கட்டளையையும், தேர்தல் காலத்தில் வாக்காளர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியையும், புறக்கணித்துவிட்டு இரட்டை ஆக்ஷியை நடத்துவதற்குப் பக்கபலமாயிருந்து வருவதால் தேர்தல் காலத்தில் ஆதரவு தேடிக்கொடுத்த "சுயராஜ்யா" உள்படவேறு அனேகபத்திரிகைகளும், அனேக தலைவர்களும், பல பொதுக் கூட்டங்களும் கண்டிக்க முற்பட்டுவிட்டன. ஆனால் பிராமணர்கள் நலத்தையே சதா நாடிக்கொண்டு திரியும் அய்யங்கார் "மித்திரன்" மட்டும் ஒரு சிறிதும் இடங்கொடுக்கவில்லை. "ஒக்கைக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாப்பாள்" என்ற மாதிரி சுயராஜ்யக் கக்ஷிக்கு ஜேய் முழக்கம் போடுகிறான். "மித்திரனை" அறிந்தவர்கள் யாரும் ஆச்சரியமும் படமாட்டார்கள்.

### வீண் வேலை.

சென்னை சுயராஜ்யக் கக்ஷியார் யார்? அவர்களுடைய அந்தரங்க நோக்கமென்ன? எதற்காக சட்டசபைக்குப் போனார்கள்? என்பதை மட்டும் சிறிது யோசிப்போமானால், இந்த சுயராஜ்யக் கக்ஷியாரையும், அவர்களுக்கு வக்காலத்து வாங்கிய சுதேசமித்திரனையும், ஒரு பொருளாக மதித்து கண்டனம் செய்வது வீண் வேலையேயாகும். சுயராஜ்யக்கக்ஷி யென்பது தென்னாட்டு பிராமணக்கக்ஷி, அதன் நோக்கம் இரட்டைஆக்ஷி அழிப்பதல்ல. ஆனால் அவர்களுடைய உத்தியோக வேட்டைக்கு இடையூறு செய்து வரும் பிராமணரல்லாதார் [ஜஸ்டிஸ்] கக்ஷியை அழிப்பதே நோக்கம். இதை ஒரு பெரிய பதவியிலிருக்கும கனம் சி.பி. ராமசாமி அய்யர் அவர்களே சொல்லிவிட்டார். கடற்கரை சாஸ்திரிகள் பல தடவை சொல்லியிருக்கிறார்கள்.

### மந்திரிசபையும் ஒப்பந்தமும்.

மெஜாரிடி அங்கத்தினர்களாகிய இவர்களை மந்திரிசபை அமைக்கும்படி கேட்டபோது, தாங்கள் ஒப்புக்கொண்டால், தங்கள் கக்ஷியில் மந்திரி பதவி கிடைக்காமல் பிணங்கிக்கொண்டவர்களும், சுயேச்சை, ஜஸ்டிஸ் கக்ஷிகளும் ஒன்று சேர்ந்து தங்கள் பேரில் நம்பிக்கையின்மை தீர்மானம் செய்து விடுவார்களென்றும், அப்புறம் தங்கள் கக்ஷியும் போய் பழயபடி பிராமணரல்லாதார்களே மந்திரியாய் வந்து விடுவார்களென்று பயந்தே, காங்கிரசு கட்டளையில்லை யென்று அரிச்சந்திர ஞாயம் சொல்லிவிட்டார்கள். மே. த. கவர்னரவர்களை, காங்கிரசு கூடும்வரை மந்திரிசபை நியமனம ஒத்திவைக்கும்படியும் இரந்தார்கள். அய்யர், வரும்வரை அமாவாசை நிற்காது போ என்று சொல்லிவிட்டார். அப்புறம்.

### ஆருவாச்சாரி பிரவேசம்,

பிராமணர்களுக்காவது, அவர்கள் கக்ஷிக்காவது, ஏதாவது குழப்பம் ஏற்படுகிற காலத்தில் தகுந்தபடி தோது சொல்லிக்கொடுத்து, சூட்சியால் சூருவம் கண்டுபிடிப்பதில் நிபுணராகிய ஆருவாச்சாரிக்கு சமாசாரம் போனவுடன், வாய்வு வேகம மனோவேகமாக சென்னைக்கு விஜயம் செய்து, "திருமைலாப்பூரில்" ஆலோசனை சபை கூட்டி, பிராமணரல்லாதார் ஜஸ்டிஸ் கக்ஷியும் வரக்கூடாது; காங்கிரசுக் கட்டளை யென்று பெயர் வைத்துக்கொண்டு சுயராஜ்யக் கக்ஷியும் வரக்கூடாது; பிராமணர்கள் உத்தியோகம் ஏற்றுக்கொண்டார்களென்று ஜனங்கள் சொல்லவுங் கூடாது; ஆனால் பிராமணர்கள் எல்லா உத்தியோகங்களிலும இந்த ஆக்ஷியில் ஆதிக்கம் பெறவும வேண்டும்; கடந்த ஆறுவருஷங்களில் கிடைக்காது போன உத்தியோகங்களை பிராமணர்கள் பெற்றுவிட வேண்டும்; ஆனால், பிராமணரல்லாதார்களே ஆக்ஷி நடத்துகிறார்களென்று சொல்லிக்கொள்ளவும் வேண்டும். இத்தனை பொருத்தங்களுமிருக்கும்படியாய் ஒரு ஒத்துழையாக் காங்கிரசு ஆச்சாரி; அதிகார வர்க்க ஐயர்; முட்டுக்கட்டை அய்யங்கார், இவர்கள் தவிர ஒருவரைத் சேர்ந்தெடுத்து அவியல் மந்திரிசபை நிர்மாணம் செய்தார்கள், இது பார்லிமெண்டரி சீர்திருத்தமுறைக்கு முரண்பாடுடைய நவீன ஏற்பாடு.

### ராஜி ஒப்பந்தம்.

தற்கால மந்திரிகள் தனிப்பட்ட ஹோதாவில் மிகவும் நல்லவர்கள், தாராள நோக்கமுடையவர்கள். ஆனால், சட்டசபையில் மிகவும் சிறிய தொகையினராயிருப்பதால் இவர்கள் கக்ஷிப் பெயருக்கேற்ப சுயேச்சையாய் இருக்க முடியாது. இவர்களுக்கு உத்தியோக ஆசை இருக்கும் பக்ஷத்தில் ஏதோ ஒரு மெஜாரிட்டி கக்ஷிபலத்தில் தான் காலந்தள்ள வேண்டும். ஜஸ்டிஸ் கக்ஷியார் கொண்டு வந்த தேவஸ்தான சட்டத்தை பதினெட்டு நாள் எதிர்த்தும், அதை ஒழிப்பதற்கு பகீரதப் பிரயத்தனம் செய்தும், வைசிராய் பிரபுக்கு பொய்த் தந்திகள் கொடுத்தும் அச்சட்டத்திற்கு எதிரிடையாயிருந்து வருகிற சுயராஜ்யக் கக்ஷியார்களுக்குத் திருப்தி ஏற்படும படியாய், ஒவ்வொரு மந்திரியும் எங்கே பேசினாலும் "எங்கள் வேலைத் திட்டம் இன்னம் முடிவாகாவிட்டாலும், தேவஸ்தான மசோதாவைத் திருத்தம் செய்யப்போவதாக" சொல்லிவருவதும், ஒரு மந்திரி சொல்லாவிட்டாலும் இன்னொரு மந்திரி அதை ஞாபகப்படுத்தி அவர் அதைச் சொல்ல மறந்து விட்டார் என்று இவர் சொல்வதும், கோவை ஸ்ரீமான் சி. வி. வெங்கிட்டரமணய்யங்கார் சுயராஜ்யக்கக்ஷிக்கும் மந்திரிமார்களுக்கும் ஒரு ராஜி ஏற்படுத்திக் கொண்டிருப்பதாகச் சொல்வதையும் கவனித்தால், ஏதோ மந்திரிசபை அமைக்கும் போதே ஒரு உறுதி செய்து கொண்டிருப்பதாக நினைக்கவேண்டியிருக்கிறது. நிற்க, தேவஸ்தான மசோதாவைப்பற்றி "எங்கப்பா குதிருக்குள்ளில்லை" என்றமாதிரி மந்திரிகள் அடிக்கடி பேசுவானேன்? இச் சட்டம் இருமுறை சட்டசபையில் நிறைவேறி மே.த. கவர்னர் அவர்களாலும், வைசிராய் பிரபு அவர்களாலும் அங்கீகாரம் பெற்று அமுலிலிருந்து வருகிறது இப்படியிருந்தும் சுயராஜ்யக்கக்ஷி பிராமணர்கள், மந்திரிமார்களைக் கொண்டு மிரட்டுவானேன்! அந்த சட்டம் இருந்தால் என்ன? போனால் என்ன? ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர்கள் சத்தியமே ஜெயம் என்று தங்கள் கடமையை நிறைவேற்றி விட்டார்கள். இனி அது போனால்கூட அவர்களுக்கு யாதொரு அவமானமும் கிடையாது. அவமான மெல்லாம்........தான்.

### நம்பிக்கையின்மை தீர்மானம்

சுயராஜ்யக் கக்ஷியின் யோக்கியதையைத் தேசத்தாருக்குக் காட்ட வேண்டி ஜஸ்டிஸ் கக்ஷியார் மந்திரிகள் பேரில் நம்பிக்கையின்மை தீர்மானம் கொண்டு வந்தார்கள். இவர்களுக்கு கொஞ்சமாவது காங்கிரசு, காந்தியடிகள், தேசபந்து, வாக்காளர், நினைப்பிருந்தால், உடனே ஓட்டுக் கொடுத்து தேசத்தார் நன்மதிப்பைப் பெற்றிருக்கலாம். ஒரு மனிதனுக்கு ஏதாவது ஒரு இடத்தில் புழுத்திருந்தால் மூக்கினால் நாற்றம் கண்டுபிடிக்கலாம். ஆனால் மூக்கிலேயே புழுத்து விட்டால் நாற்றமேது?

### தீர்மானம் தோற்றேயிருக்கும்.

விவாதத்தின் போது சட்டசபையில் கலந்து கொண்ட சுயராஜ்யக்கக்ஷியாரின் தொகையைக் கவனித்தால் நம்பிக்கையின்மை தீர்மானத்தின் பேரில் இவர்கள் ஓட்டுக்கொடுத்திருந்தாலும் தீர்மானம் தோற்றேயிருக்கும் அப்போது யார்க்கும் தைக்காமல் நாங்கள் காங்கிரசு கட்டளைப்படி ஓட்டுசெய்தோம். ஆனால் மந்திரிகளுக்கு அதிக ஆதரவு கிடைத்து விட்டதென்று சொல்லலாம். அதை விட்டு பழிச்சொல்லையும் பெற்றுக்கொண்டார்கள். ஆனால் ஆருவாச்சாரியார் இருந்திருக்கும்பக்ஷத்தில் இந்த யுக்தி சொல்லிக்கொடுத்திருப்பார்.

### எல்லாரும் ஒன்றே

ஆகையால், காரியம் சாதிப்பதில் நமது பிராமணர்கள் கைதேர்ந்தவர்கள். சமயத்திற்குத் தகுந்த வேஷம் போட்டுக்கொள்ளுவார்கள். தங்களுக்குள் இருக்கும் மனஸ்தாபத்தையும், அபிப்பிராய பேதத்தையும், பிறத்தியாரை ஏமாற்றும் விஷயத்தில் விட்டுக்கொடுத்து விடுவார்கள். நமது கோடாகோடி திரு ராஜகோபாலாச்சாரியார், சுயராஜ்யக்கக்ஷியார்களை ஒழிக்கப் போகிறார்கள், ராஜ்யம், ராமராஜ்யம் ஆகப்போகிறது, ஓடிப்போய் கொடிப்பிடித்து சுயராஜ்யக் கக்ஷிக்கு ஓட்டுக்கொடுங்கள் என்று சொன்னாரே இப்போது காலால்மந்திரி இருவரென்று களை ஒழிப்பதாக சாத்தியமில்லை யென்று திரு முறைக்கு மும்முறை சொல்லியதும், சுயராஜ்யக் கக்ஷியார் காங்கிரசுக்கு விரோதம செய்ததும் தெரிந்து, ஏன் கப்சுப் மௌனவிரதம்?

### திருவல்லிக்கேணி கடற்கரை.

தேர்தல் காலத்தில் நாங்கள் இரட்டை ஆட்சியை ஒழிப்போம் மந்திரிசபையை அழிப்போம். அதிகாரவர்க்கத்தைப் பழிப்போம். எங்களுக்கு ஓட்டுக்கொடுங்கள் என்று பறைபடித்தும், மந்திரிகள் சம்பளப்பிரமாணத்தில் கொலைப் புள்ளி போட்டுக்கொண்டும், அலங்கத்தை தாண்டி கேள்விகள் அளந்து வந்த "திருவல்லிக்கேணிகடற் கரை" "மப்புக்கண்டம் பறிகொடுத்த பாப்பாத்தி போல் விழிக்கிறது." இப்போதைய மந்திரிகளின் பிரமாணத்திற்குப் புள்ளி, கிள்ளி ஒன்றையுங்காணோம்.

1. ஆகையால், நமது சென்னை பிராமணர்களும், அவர்களுடைய புன்சிரிப்பு தேசபக்தர்களும், ஒத்துழையாக் காங்கிரசை, சுயராஜ்யக் கட்சி யென்ற பெயரைக்கொண்டு ஏமாற்றி விட்டார்கள்.

2. ஒத்துழையாமையால் தங்களுக்குக் காங்கிரசின் செல்வாக்குப் போய்விட, ஒத்துழையாமைக்கு மூல காரணமாயிருந்த மகாத்மா காந்தியை தேசபந்துவைக் கைக்குள் போட்டுக்கொண்டு வெளியே தள்ளி ஏமாற்றி விட்டார்கள்.

3. முட்டுக்கட்டையே தனது முழுத்திட்டம் என்றும், இரட்டை ஆட்சியை ஒழிப்பதே தனது லட்சியம் என்றும், அஞ்சா நெஞ்சத்துடன் சுயராஜ்யக் கட்சியை ஏற்படுத்தி, வங்காள சட்டசபையில் மந்திரிகளின் சம்பளத் தீர்மானத்தின் போது மரண வேதனைப்பட்டுக் கொண்டிருந்த "வீராதி வீரர்" நமது தேசபந்து, தோணியில் படுத்துக்கொண்டு ஆட்களை தூக்கிக்கொண்டு போய் சட்ட சபைக்குள் வைத்துங் கூட முன் வைத்த காலைப் பின் வாங்காமல், தீர்மானத்தை நிறைவேற்றிவைத்து, மந்திரி சபையையும் இரட்டை ஆட்சியையும் வங்காளத்தில் ஒழித்து விட்டு தனது உயிரையும் விட்டார்.

அந்தோ! அந்தோ! வங்காளச் சிங்கமே! வயிரமலையே! மாணிக்கக்குன்றே! தங்களுடைய திட்டத்தையும், பெயரையும் கெடுத்துக் கொல்ல இந்தச் சென்னை பிராமணர்கள் தங்களுக்கு சிஷ்யராக வந்தார்கள். தங்களையுமா ஏமாற்றி விட்டார்கள்? அந்தோ! அந்தோ!

4. "குருக்களையும் விடாதய்யா குமரகண்ட வலிப்பு" என்றபடி காங்கிரசு, மகாத்மா, தேசபந்து இவர்களை ஏமாற்றியவர்களுக்கு, வாக்காளர்களை ஏமாற்றுவது பெரிய காரியமா? இதில் ஆச்

## வகுப்புவாரி உரிமையை விட்டுவிட சென்னை முஸ்லீம்கள் ஒப்புவதில்லை

புதிய சீர்திருத்தத்தின் படி அரசியலில் மகமதியர்களுக்கு கொடுத்திருக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஒழிப்பதற்காக சென்னை பார்ப்பனர்கள் சூழ்ச்சி செய்து வருவதும், தங்கள் பணச்செலவில் சில மகமதியர்களை தங்களுக்கு அடிமையாக்கிக் கொண்டு அவர்களுக்கு தேர்தல்களில் தாங்கள் உதவி செய்து மகமதிய சமூகத்திற்கு அனுகூலமில்லாமல் தங்களது சுய நலத்திற்காக அவர்களை உபயோகித்து வருவதும் யாவரும் அறிந்ததே. சமீபத்தில் டில்லியில் இது விஷயமாய்க் கூட்டம் கூடியதில், தங்களுக்கு வகுப்பு வாரித் தொகுதி வேண்டாம் என்றும், கலப்புத் தொகுதியில் தங்களுக்கு என்று சில ஸ்தானங்கள் ஒதுக்கி வைத்தால் போதுமென்றும், சில மகமதியர்கள் ஒப்புக் கொண்டதாக விஷயங்கள் வெளியாயிருக்கின்றன. ஆனால், பல பத்திரிகைகளின் மேல் அம்மாதிரி ஒப்புக்கொண்டதாக பின்னால் விஷயங்கள் வெளிவருகின்றன. ஆனால், பல சுவாதீன முஸ்லீம்களும் சமூக விஷயத்திலும் மார்க்க விஷயத்திலும் அபிமானமும் பொறுப்பும் உள்ள முஸ்லீம்களும், இந்த விஷயத்தை ஆக்ஷேபித்து தங்களுக்கு இப்போதுள்ள வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அதாவது முஸ்லீம்களாலேயே தெரிந்தெடுக்கும் பாத்தியமே வேண்டுமென்று சொல்லி வருவதோடு, மேல்படி ஒதுக்கி வைக்கும் கொள்கையை ஆக்ஷேபித்தும் கண்டித்தும் வருகிறார்கள். சமூகத்தையும் மார்க்கத்தையும் கவனிக்காமல் அரசியல் முறையில் உத்தியோகமும் பதவியும் சுய நலமும் பெறலாம், வயிறு வளர்க்கலாம் என்கிற ஆசாமிகளுக்குத்தான் இந்த தனித் தொகுதி உரிமை பிடிக்காது. ஏனெனில், தங்கள் சமூகத்தாரால் தெரிந்தெடுக்கப்பட வேண்டுமானால் அவன் யோக்கியமாய் நடந்து கொள்ள வேண்டும். யோக்கியமாய் நடந்து கொள்ளுவனுக்கு சுய நலம் பலிக்காது. தங்கள் சமூகத்தார் தயவில்லாமல் வேறு சமூகத்தார் தயவில் பதவியும் பிரதிநிதித்துவமும் பெறுவதென்றால் அயோக்கியர்களுக்கு அது எப்பொழுதும் தயாராயிருக்கும். ஏனெனில், தனது சமூகத்தையும் மார்க்கத்தையும் வேறு ஒரு சமூகத்தின் நன்மைக்கு விட்டுக்கொடுப்பதால், வேறுசமூகத்தாரால் ஆனந்தத்துடன் வரவேற்பார்கள். அதனாலேயே காண்டலருக்கு இது வெகு ஜோராகவும் நடந்துவருகிறது. ஒருவன் தங்கள் சமூகத்திற்கு தனி உரிமை வேண்டுமென்றால் அவன் மற்ற சமூகத்தாரால் அழிக்கப்பட வேண்டியவனாய் விடுவான்.

---

சரியப் படக்கூடியதொன்று மில்லை. சுமமவரை ஏமாற்றுவதற்கு அவர்களுக்கு ஏராள பாத்தியமுண்டு.

— சுயராஜ்யக் கட்சிக்கு "ஜே"
— சுத்தசமதகிராஸுக்கு "ஜே"
— இரட்டை ஆட்சிக்கு "ஜே"

காங்கிரசுக்கு ஜே, காந்தியடிகளுக்கு ஜே, தேசபந்துவுக்கு ஜே, வாக்காளர்களுக்கு ஜே, ஜே, ஜே, ஜே, ஆம்மாம் ஜே —

க. வா. வெங்கிடாசலம் பிள்ளை

# சுயராஜ்யக் கட்சியைப்பற்றி பலபத்திரிகைகளின் அபிப்பிராயம்

### "ஹிந்து"

"சென்னை சட்டசபையில் மந்திரிகள் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வந்த காலத்தில் சுயராஜ்யக் கட்சியார் அதற்கு ஆதரிக்காமல் நடு நிலைமை வகித்தார்கள். இவர்கள் நடத்தையைக் குறித்து அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியார் உடனே கவனிக்க வேண்டும். கௌஹாத்தி காங்கிரஸ் தீர்மானத்திற்கு எவ்விதத்திலும் விரோதமானது. இதை மறைக்க முயல்வதில் பயனில்லை. சுயராஜ்யக் கட்சியார் கொஞ்ச காலமாகவே ஒழுங்காய் நடந்துவராமல் தவறி இருக்கிறார்கள். இந்த சந்தர்ப்பமானது சுயராஜ்யக் கட்சிக்கு பெரிய வீழ்ச்சியை உண்டாக்கியிருப்பதால் ஒழுங்கான முறையில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி திருப்ப வேண்டும்.

### "ஸ்வராஜ்யா"

"ஆந்திர மாகாண காங்கிரஸ் கமிட்டி மந்திரிகளின் சம்பளம் வரும்போது எதிர்க்க வேண்டுமென்று தீர்மானம் செய்திருக்கிறது. அப்படி இருக்கும் சென்னை சுயராஜ்யக் கட்சியார் காங்கிரஸ் தீர்மானத்தையே திரித்துக் கூறுகிறார்கள். மற்ற மாகாணங்களில் சுயராஜ்யக்கட்சியார் காங்கிரஸ் தீர்மானப்படி நடந்து கொண்டார்கள். சென்னை சுயராஜ்யக் கட்சியார் மட்டும் அந்தப்படி நடந்து கொள்ளவில்லை. இதனால் மற்ற உண்மை காங்கிரஸ்காரர்களுக்கு ஆபத்தான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி இதைப்பற்றி கவனிக்க வேண்டும்.

### "ஜஸ்டிஸ்"

சென்னை சுயராஜ்யக் கட்சியார் தங்களுடைய உயர்ந்த தேசாபிமானத்தைப் பற்றியும், எதிர்க்க முடியாத ஆண்மையைப் பற்றியும், இரட்டை ஆட்சியை எதிர்த்துக் கொண்டு வருவதைப் பற்றியும், பாமர ஜனங்களிடம் சொல்லி வந்ததெல்லாம் சட்டசபைகளில் தாங்கள் ஸ்தானம் பெறுவதற்காகச் செய்து வந்த பித்தலாட்டம் என்பதை ருஜுப்பித்துவிட்டார்கள். மந்திரிகள் சம்பள விஷயமாய் வந்த தீர்மானத்தின் போது 16 சுயராஜ்யக் கட்சி மெம்பர்கள் சபையிலிருந்து கொண்டு ஓட்டுக்கொடுக்காமல் நடுநிலைமை வகித்தார்கள். மற்ற சுயராஜ்யக் கட்சி மெம்பர்கள் முக்காடிட்ட தலையுடன் வெளியே போய் ஒளிந்து கொண்டார்கள். "அதிகாரவர்க்கத்தை உள்ளேயும் வெளியேயும் எதிர்க்கும் வீரர்களா"ன சுயராஜ்யக் கட்சியார் அதிகாரவர்க்கத்தின் கைகளை மிக நன்றியுள்ள நாய்கள் போல் நக்குவதை அறிந்தவர்கள் இனி அக்கட்சி தலைவர்களின் வார்த்தைகளை வெறும் பொய் என்பதை இப்போதாவது உணர்வார்கள். புது சட்டசபை கூடிய பின்பு சுயராஜ்யக்கட்சியார் எதை எதிர்த்தார்கள். அவற்றிற்கு பலம் கொடுக்கவே உதவி செய்து வந்திருக்கிறார்கள். தற்காலமிருக்கும் மந்திரி சபையை உடைத்தெறிய வேண்டும் என்பதே நமது முக்கிய கடமை அல்லவானாலும், நமது தேசத்தில் தேசீயம் என்னும் போர்வையில் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கும் ஒரு கட்சியின் அயோக்கியத்தனத்தை வெளிப்படுத்த வேண்டுவதே நமது முக்கியக்கடமையாகும்.

(இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க)

அதனாலேயே இந்துக்கள் என்பவர்களிலும் சிலர் தங்களுக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டுமென்று சொன்னவர்களாயிருந்தாலும், இப்போது பார்ப்பனர்களுக்கு பயந்து கொண்டு எங்கு அவர்கள் தங்கள் பிழைப்பில் மண்ணைப் போட்டுவிடுவார்களோ என்கிற சந்தேகத்தின் பேரில் இப்போது பார்ப்பனருடன் சேர்ந்து கொண்டு "வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கூடாது, அது தேசத்திற்குக் கெடுதி" என்று சொல்லுகிறார்கள். ஆனால், நமது சென்னை மாகாண மகமதிய கனவான்களில் பலர் அப்படி இல்லாமல் அதாவது பார்ப்பனருக்கு பயப்படாமல் அவர்கள் சூழ்ச்சியில் சிக்காமல் தைரியமாய் வெளிவந்து முஸ்லீம்களுக்குள் தனித்தொகுதியை எடுத்துவிட்டுக் கலப்புத் தொகுதி ஏற்படுத்தினால் முஸ்லீம்களுக்கு மிகுந்த தீமை விளைவிக்கும் என்றும், இதனால் இந்த முஸ்லீம்களுக்குள் தற்காலம் இருக்கும் ஒற்றுமை கெட்டுவிடும் என்றும், தாராளமாய் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் ஜனாப்கள் கே. பி. வி. எஸ். முகமது மீரா ராவுத்தர், டி. கே. தாஜுடீன், டி. கே. சையத் இப்ராஹீம் ராவுத்தர், முகமத் ஷரீப், எஸ். கே. அப்துல் ரஜாக், அப்துல் வஹாப், எஸ். காதர் மைதீன், யு. ஜெ. மொய்டு, உப்பி ஸாஹிப், அப்துல் ஹை முதலிய சட்டசபை மெம்பர்களாவார்கள். சென்னை அய்யங்கார் பார்ப்பனர்கள் தயவில் சட்டசபைக்கு வந்த ஜனாப்களின் கையெழுத்துகள் இதில் இல்லாதது நமது மகமதிய சகோதரர்களுக்கு ஒன்றும் ஆச்சரியமாயிருக்காது. ஆதலால் அதைப் பற்றி ஒன்றும் குறிப்பு எழுதவில்லை. 1929ல் வரப்போகும் கமிஷனுக்குள் நமது சென்னைப் பார்ப்பனர்கள் செய்யும் முக்கிய வேலைகள் எல்லாம் இந்த வகுப்பு வாரி உரிமையை ஒழிக்க பிரயத்தனப்படுவதல்லாமல் வேறில்லை. வகுப்பு வாரி உரிமை வந்துவிட்டால் பிழைக்க முடியாத சில பார்ப்பனரல்லாதாருக்கும் இதைத் தவிர இப்போது வேறு வேலை இல்லை. ஆகையால், இந்த சமயம் இந்து முஸ்லீம்கள் மிகுந்த ஜாக்கிரதையுடன் இருக்க வேண்டும்.

# மேட்டூர் திட்டப் புரட்டு.

சட்ட சபையில் கோவை ஸ்ரீமான் ராவ் பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் அவர்கள் கேள்வியும், சர் சி. பி. ராமசாமி அய்யர் அவர்கள் பதிலும்,

சி. எஸ். ஆர். முதலியார்:— மேட்டூர் அணைக்கு அஸ்திவாரம் வெட்ட வாங்கப் போகும் குறிப்பிட்ட மாதிரி இயந்திரம் தாங்கள் வாங்க உத்தேசித்திருக்கும் கம்பெனியில் மாத்திரம் தான் கிடைக்கக் கூடியதா? அல்லது வேறு கம்பெனிகளிலும் கிடைக்குமா?

சர் சி. பி. அய்யர்:—

அது ஒரு குறிப்பிட்ட மாதிரி என்று நான் நினைக்கவில்லை. இந்த குழி தோண்டும் இயந்திரம் மிகவும் பேர் போனது. சக்கூர், பம்பாய் முதலிய இடங்களில் குழி வெட்ட இதையே உபயோகிக்கிறார்கள்.

(மற்ற இடத்தில் இது போன்றது கிடைக்குமா கிடைக்காதா என்று முதலியார் கேட்டதற்கு பதில் இல்லை)

சி. எஸ். ஆர். முதலியார்:—

அது ஒரு குறிப்பிட்ட மாதிரியாய் இல்லாமல் சாதாரணமானதாயிருந்தால், தாங்கள் ஏன் மற்ற கம்பெனிகளிலிருந்தும் அதன் விலையை தெரிந்து, விலை குறைவாய்க் கிடைக்கும் இடத்தில் வாங்க ஏற்பாடு செய்யக்கூடாது?

சர் சி. பி. அய்யர்:—

இதற்கு பதில் சொல்ல நோட்டீஸ் வேண்டும்.

சி. எஸ். ஆர். முதலியார்:—

குழி வெட்டும் இயந்திரம் இல்லாமல்! இயந்திரத்தில் செய்தால் எத்தனை நாளில் முடியுமோ அதைவிட சீக்கிரத்தில் கூலி ஆள்களை விட்டு, வெட்டி சரிசெய்து கொடுப்பதாக தக்க கண்டிறாக்டர்கள் முன்வந்தால், இயந்திரம் வாங்கும் எண்ணத்தை விட்டு, கூலி ஆள்களை விட்டுக்கொண்டு வேலை வாங்க முடியுமா?

சர். சி. பி. அய்யர்:—

முடியாது.

சி. எஸ். ஆர். முதலியார்:—

தண்ணீரை விவசாயிகள் எடுத்துக்கொள்ள ஒப்பியிருப்பதாக கனம் சட்ட மெம்பர் சொன்னார். வாய்க்கால் வெட்டுவதற்கு முன்னர் குடிகளிடமிருந்து விதிக்கப்பட்டிருக்கும் தண்ணீர் வரிக்கு கட்டுபடுத்த மூச்சலிக்கா வாங்குவதில் ஏதேனும் கஷ்டமுண்டா?

சர். சி. பி. அய்யர்:—

கனம் மெம்பர் அவர்கள் சொன்ன பிரகாரமே செய்ய யோஜிக்கப்படுவதுடன், அவரது யோசனைக்கு வந்தனமளிக்கிறேன்.

சி. எஸ். ஆர். முதலியார்:—

கனம் கிருஷ்ணன் நாயர் அவர்களது கேள்விக்கு விடை அளிக்கும்போது குறிப்பிட்ட செவின்யூ போர்டார் ரிபோர்ட்டை கனம் சட்ட மெம்பர் ஆஜர்படுத்துவாரா?

சர். சி. பி. அய்யர்:—

அது இதர ரிபோர்ட்டுகளுடன் முன்னமே சபையில் ஆஜர் செய்யப்பட்டிருக்குமென்று நினைக்கிறேன்.

சி. எஸ். ஆர். முதலியார்:—

மேட்டூர் அணை வேலைக்குத் தன்னை நியமிக்குமபடி ஸ்டோனி துரை அவர்களே கேட்டுக்கொண்டாரா?

சர். சி. பி. அய்யர்:—

நான அக்கேள்விக்கு விடை கொடுக்க மறுக்கிறேன்.

சி. எஸ். ஆர். முதலியார்:—

ஸ்டோனி துரை அவர்கள் எந்த அணை கட்டுவதிலாவது அனுபவம் பெற்றிருக்கிறாரா?

சர். சி. பி. அய்யர்:—

இரண்டு மூன்று உத்தியோகஸ்தர்களைத் தவிர, வேறு யாருக்கும் இம்மாகாணத்தில், இம்மாதிரி பெரிய திட்டங்களில் அனுபவமில்லை; அரசாங்கத்தாரும் சமீப காலம் வரை இப்படி பெரிய திட்டங்கள் ஆரம்பிக்கவில்லை.

சி. எஸ். ஆர் முதலியார்:—

மேற் குறிப்பிட்ட அம் மூன்று உத்தியோகஸ்தர்களை இத்திட்டத்திற்கு நியமிக்கப்படலாகாதா?

சர். சி. பி. அய்யர்:—

அவ்விஷயம் ஆலோசிக்கப்படும்.

சி. எஸ். ஆர். முதலியார்:—

சீதகாரி [குளிர்ச்சி தரும் இயந்திரம்] ஆஸ்பத்திரிக்கு மட்டும் உபயோகிப்படுவதா அல்லது கிளப் சங்கத்துக்கும் பிரயோஜனப்படுவதா?

சர். சி. பி அய்யர்:—

அது சங்கத்தின் பிரயோஜனத்திற்காக ஏற்படுத்தப்பட்டதன்று.

சி. எஸ். ஆர். முதலியார்.—

ஆஸ்பத்திரியும் சங்கமும் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என்று கனம் சட்ட மெம்பர் அவர்கள் சொல்லியிருக்க, அவ்வியந்திரம் எப்படி அதற்குள் கெட்டுப்போய்விட்டது

சர் சி. பி. அய்யர்:—

கனம் கோயமுத்தூர் மெம்பர் அவர்கள் மற்றொரு கனம் கோயமுத்தூர் மெம்பர் அவர்கள் கொடுத்த தகவலிலிருந்து கேள்வி கேட்கிறார். அவ்வியந்திரம் கெட்டுப் போனது எனக்குத் தெரியாது. ஆனால் மற்றொரு கனம் மெம்பர் அவர்கள் கொடுத்த தகவலிலிருந்து அரசாங்கத்தார் இவ்விஷயத்தில் விசாரணை செய்வார்கள். ஒரு மெம்பர் கொடுக்கும் தகவலை ஆதாரமாகக்கொண்ட கேள்விகளுக்கு பதிலிறுப்பது கஷ்டமானது


ஸ்ரீமான் ரத்தினசபாபதி முதலியாரவர்களின் இந்தக் கேள்விகளையும் இதற்கு கனம் சர். சி. பி. அய்யர் அவர்கள் கொடுத்திருக்கும் பதில்களையும் பார்த்தால் மேட்டூர் திட்டம் புரட்டு, ஹம்பக், சகாபாசம் என்று "ஜஸ்டிஸ் பத்திரிகை எழுதியது சரியென்று யாவருக்கும் எளிதில் விளங்கும். ஒரே மாதிரி இயந்திரம் மற்றொரு இடத்தில் சல்லிசாய் கிடைக்கிறதை ஏன் வாங்கக்கூடாது என்று கேட்டால் அதற்கு நோட்டீசு வேண்டுமென்று சொல்லுவதும், வாங்க சம்மதிக்காததும் பார்த்தால், அதில் சந்தேகப்பட இடமிருக்கிறதா இல்லையா?

இயந்திரம் செய்யும் வேலையை மனிதர்கள் செய்யத் தயாராயிருக்கும் போதும், இயந்திரத்தினால் எவ்வளவு நாளில் செய்து விடலாமோ அவ்வளவு நாளிலேயே முடித்துக் கொடுக்கத் தக்க கண்டிறாக்டர்கள் ஒப்புக் கொண்டால் அவர்கள் மூலம் வேலை நடத்தக்கூடாதா என்றால், கூடாது என்று சொல்லுகிற பதிலிலிருந்து இயந்திரத்திற்கும் சர் அய்யர் அவர்களுக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கவேண்டும் என்கிற சந்தேகம் ஏற்படுகிறதா இல்லையா? தவிர, இவ்வளவு பத்து லட்சக்கணக்கான ரூபாயை நமது நாட்டு மக்கள் கூலியாக அடையக்கூடாது, வெள்ளைக்காரர்கள் தான் அடையவேண்டும் என்ற பிடிவாதமிருக்கிறது என்பதும், எப்படியாவது வெள்ளைக்காரருக்கு நல்லபிள்ளையாகவேண்டுமென்று பார்க்கிறார்களே யல்லாமல், நாட்டுக்கு க்ஷேமமாவதைப்பற்றிக் கொஞ்சமாவது கவலைப்படுவதில்லை என்று எண்ண இடமிருக்கிறதா இல்லையா?

தவிர, மேட்டூர் திட்டம் நிர்வாகத்திற்கு ஏற்படுத்தியிருக்கிற பெரிய உத்தியோகஸ்தர்கள் இம்மாதிரி விஷயத்தில் அனுபோகமுள்ளவரா என்று கேட்டால், இம்மாதிரி அனுபோகமுள்ளவரே இந்த மாகாணத்தில் இரண்டு மூன்று பேர்கள் தான உண்டு. ஆதலால் அனுபோகப்பட்டவர்களை நியமிக்க முடியாது என்கிற மாதிரியில் பதில் சொல்லுவதும், அந்த அனுபோகப்பட்ட இரண்டு மூன்று பெயரையாவது ஏன் நியமிக்கவில்லை என்றால், யோசிக்கலாம் என்று சொல்லுவதினால் இந்த உத்தியோகஸ்தருக்கும் சட்ட மெம்பருக்கும் ஏதாவது கட்டுப்பாடு இருக்கவேண்டும் என்று அதாவது "நான் உங்களுக்கு அனுபோகமில்லாவிட்டாலும் உங்களையே மீ 3000, 4000 ரூ சம்பளத்தில் நியமித்து விடுகிறேன், நீங்கள் எங்கள் பார்ப்பனர்கள் அனுபோகமில்லாவிட்டாலும் அவர்களை 500, 1000, 2000 ரூ மீ சம்பளமுள்ள உத்தியோகத்திற்கு நியமிக்க வேண்டும் பணம் ஊரார் வீட்டுதுதானே, உங்கள் பெரியவர்கள் சம்பாதித்ததுமல்ல. எங்கள் பெரியவர்கள் சம்பாதித்ததுமல்ல" என்கிற ஒப்பந்தமாயிருக்கலாம் என்று எண்ண இடமிருக்கிறதா இல்லையா?

தவிர, இவ்வளவு பணச்செலவு செய்து ஏற்படுத்தும் திட்டத்தின் தண்ணீரை உபயோகித்துக்கொள்ளுபவர்களிடம், இன்ன விகிதம், வரி வசூல் செய்வதாக ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளவில்லை என்றால், இவ்வளவு கோடி ரூபாய் செலவு செய்து விட்டு இனிமேல் யோசிக்கிறேன் என்று சொல்லுவதானால், தண்ணீர் பாய்ச்சிக்கொள்ளும் மிராசுதாரர்கள் பெரும்பாலும் பார்ப்பனர்கள் ஆனதால் சர். அய்யர் வேண்டுமென்றே அவர்களைக் கட்டுப்படுத்தாமல் விட்டு விட்டார் என்று சொல்ல இடமிருக்கிறதா இல்லையா? ஆகவே நமது நாட்டா

[இதன் தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க]



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன் றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு.

அக்ஷய-ஹூ பங்குனி-மீ 28-உ

## சுயராஜ்யக் கட்சியாரின் சமாதானம்.

சுயராஜ்யக்கட்சியார் என்கிற தமிழ் நாட்டுப்பார்ப்பனக்கட்சியாரின் பூளவாக்கு சென்ற மாதம் சட்டசபை வரவு செலவு திட்டத்தின் போது வெளியாய்விட்டதால, அதைமறைக்க என்னென்னமோ தந்திரங்களும்,மந்திரங்களும்செய்கிறார்கள்.என்னசெய்தும் அதைமறைக்க மறைக்க நாற்றம் அதிகமாகிறதே தவிர, குறைந்தபாடில்லை இவர்களின் நடவடிக்கையைப்பற்றிஇவர்களுக்கு உதவி செய்து வந்த தமிழ் நாட்டுக் காங்கிரஸ்தேசியப் பத்திரிகைகள் என்று சொல்லப்படும் "தமிழ் நாடு" "நவசக்தி" "தேசபக்தன்" முதலிய பார்ப்பனரல்லாதார் பத்திரிகைகளும், "சுயராஜ்யா" "ஹிந்து" முதலிய பார்ப்பனப் பத்திரிகைகளும், "வசுமதி" "மராட்டா" முதலிய வெளிமாகாணப்பத்திரிகைகளும் கண்டித்திருக்கும் சாராம்சத்தை மற்றொரு பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம். இவைகளிலிருந்து "சுதேசமித்திரன்" என்கிற ஒரு பார்ப்பனப் பத்திரிகை போக, மற்றபடி பார்ப்பனர் தயவில் நடக்கும்பத்திரிகைகள் கூட வேஷத்திற்காவது கண்டிக்காமல் விடவே இல்லை. ஆகவே, இப்பார்ப்பனர்களின் கூட்டத்தை மோசமான தென்பதும வஞ்சகமான தென்பதற்கும் இனியாரும சந்தேகப்பட இடமே இல்லை. ஆனால் இக்கூட்டத்தார் கொஞ்சமும் தங்கள் காரியத்திற்கு வெட்கப்படாமல், இதற்கு சமாதானம் சொல்லப் புறப்பட்டிருக்கும் யோக்கியதையைப் பார்க்கும் போது, ஜனங்களை இவர்கள் எவ்வளவு தூரம் முட்டாள்கள் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதையே சிக்கவேண்டுவதற்காகவே இதைஎழுதுகிறோமே யொழிய வேறில்லை. அதாவது,சென்ற சனிக்கிழமை மாலை செளந்தர்யமஹாலில் "மந்திரிகளின் சம்பளத்திற்கு ஆதரவளித்ததற்குக் காரணம்" சொல்வதற்கு என்று ஒரு கூட்டம் கூட்டி அதில் பேசிய பிரசங்கிகளின் யோக்கியதையைப் பொது ஜனங்களின் கவனிப்புக்குக்கொண்டு வருகிறோம். ஸ்ரீமான் சாமி வெங்கடாசலம் செட்டியார் தலைமை வகித்துப் பேசியதில், அவர் மந்திரிகளை ஆதரிப்பதற்குச்சொல்லும் காரணங்களாவன,

"இருக்கும் மந்திரியைத் தொலைத்து விட்டால், ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகள் வந்து விடுவார்கள், ஜஸ்டிஸ் கட்சியாரை தேசத்தார் விரும்பவில்லை". ஜஸ்டிஸ் கட்சியார் செய்த குற்றம் என்னவென்றால் "அவர்கள் வகுப்பு வாதம் பேசுகிறார்கள்". சுற்றிச் சுற்றி இந்த விஷயங்களைத்தான் தங்கள் நடவடிக்கைகளுக்குச் சமாதானம்சொல்லுகிறார்கள். இதிலிருந்தே இவர்கள் செய்து வந்த தந்திரமும், சூழ்ச்சியும், போட்டுக்கொண்ட வேஷமும் எப்படியாவது ஜஸ்டிஸ் கட்சியை ஒழிக்க வேண்டும் என்கிற கருத்துக்கொண்டே யல்லாமல் வேறு ஏதாவது இருக்கிறதாகத்தெரிகிறதா?

'இரட்டை ஆட்சியை ஒழிப்பதும்' "சட்டசபையில் ஒத்துழையாமை செய்வதும்" "அரசாங்கம் நடைபெறாமல் முட்டுக்கட்டை போடுவதும்" இப்போது என்னவாயிற்று? இவைகளை ஆதரித்த "தேசியவாதிகள்" "உரிமைக்காரர்கள்" நாம் இந்த விஷயத்தை அந்தக்காலத்திலேயே எடுத்துச் சொன்னபோது, "நாயகர் தேசத்துக்கு விரோதமாய்ப்போய் விட்டார்,காங்கிரசுக்கு விரோதமாய்ப்போய்விட்டார், காங்கிரஸ் ஏற்றுக்கொண்ட சுயராஜ்யக் கட்சிக்கு விரோதமாய்ப் போய் விட்டார்" என்று சொல்லிக்கொண்டு திரிந்து விட்டு, இப்போது நாம் சொன்னதெல்லாம நிஜமானவுடன், நம்முடன் கூடவே கோவிந்தா போட்டுக் கொண்டு "சுயராஜ்யக் கட்சி அயோக்கியக் கட்சி, பார்ப்பனக் கட்சி என்று அப்போதே சொன்னேன், இப்போதே சொன்னேன்" என்று நாட்டுக்கு நல்ல பிள்ளைகளாகப் பார்க்கிறார்கள். சுயராஜ்யக் கட்சியார் அயோக்கியர்களா? அல்லது அவர்களுக்கு அதிகப் தேடிக்கொடுத்து பாமரமக்களையும் அவர்களை நம்பும்படி செய்து, சதி செய்து தேசத்தையும் சமூகத்தையும பாழாக்கினவர்கள் அயோக்கியர்களா? என்பதை யோசிக்க விரும்புகிறோம். சுயராஜ்யக் கட்சியாரிடம் அந்தக் காலத்திலும் ஜனங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றே சொல்லுவோம். அவர்களை ஜனங்கள் எவ்வளவு வெறுக்க வேண்டுமோ அவ்வளவு சுயா காங்கிரஸ் முதல் வெறுத்துக் கொண்டு தான் வந்தார்கள். ஆனல் எப்படியோ தந்திரத்தாலும் வேஷத்தாலும் பாமர ஜனங்களிடம செல்வாக்குப் பெற்றவர் அவர்களை ஆதரித்ததாலும் பலகௌரவ பிள்ளை பத்திரிகைகள் சுயபுத்தி இல்லாமல பிதற்றினதாலும், சுயராஜ்யக் கட்சியார் தங்கள் விஷங்களை நாட்டில் பரப்ப முடிந்ததே தவிர வேறில்லை.

ஆனாலும், இப்பொழுதும் கேட்கிறோம். ஜஸ்டிஸ் கட்சியார் செய்த தப்பிதமென்ன? "அதிகாரங்களைக் கைப்பற்ற முயர்ச்சித்தார்கள்" என்றே வைத்துக் கொள்ளுவோம், வேறு எந்தக்கட்சி முயர்ச்சிக்கவில்லை?

"தங்கள் இனத்தாருக்கு உத்தியோகம் கொடுத்ததாகவே" வைத்துக்கொள்ளுவோம். எந்த கட்சி அப்படிச் செய்யவில்லை?

ஒத்துழையாமையின் போது அதற்கு விரோதமாயிருந்தார்கள் என்றே வைத்துக் கொள்ளுவோம்.

இந்த சுயராஜ்யக் கட்சியார் ஒத்துழையாமைக்கு அநுகூலமாயிருந்தார்களா? ஜஸ்டிஸ் கட்சியாராவது வெளியில் இருந்து கொண்டு மனதில் பட்டதை ஒளிக்காமல் சொன்னார்கள், செய்தார்கள். சுயராஜ்யக் கட்சியார் கூட இருந்தே குடியை கெடுத்தார்கள்.

மற்றபடி "ஜஸ்டிஸ் கட்சியார் சர்க்காருக்கு அநுகூலமாயிருந்தார்கள்" என்றே வைத்துக்கொள்ளுவோம்.

வேறு எந்தக் கட்சி சர்க்காரை எதிர்த்தது? எந்தக்கட்சி சர்க்காருக்கு ஆதரவில்லாமலிருக்கிறது?

சந்தர்ப்பமில்லாத காலத்தில் சி அந்தப்பழம் புளிக்கும் என்று சொன்னதே அல்லாமல் சர்க்கார் சம்பளம் பெறுமலும் அவர்கள் இட்டபதவி பெறுமலும் எந்தக்கட்சி இருக்கிறது?

ஜஸ்டிஸ் கட்சி தலைவர்கள் தேசபக்தர் என்பவர்களை வைததாகவே வைத்துக் கொள்வோம்.

காங்கிரஸ் சுயராஜ்யக்கட்சித் தலைவர், காரியதரிசிகள் முதலியவர்கள், தேசபக்தர்கள் என்பவர்களை ஜெயிலில்வைக்கும்படியும், அவர்கள் பேரில் நடவடிக்கை நடத்தும்படியும, சர்க்காரையும், சட்டமெம்பரையும். அட்வகேட் ஜனரலையும் கெஞ்சவில்லையா? ஊர் ஊராகப்போய் தேசியப் பத்திரிகை என்பவைகளின் பேரில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படி ஒத்துழையாமைக் கட்சித் தலைவர்கள் முதல் எல்லோரும் சொல்லவில்லையா?

ஜஸ்டிஸ் கட்சியார் சட்டசபையில் அக்கிரமம் செய்ததாகவே வைத்துக்கொள்ளுவோம். காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியார் சட்ட சபையில் தேவஸ்தான சட்டம் போன்ற அவசியமும், முக்கியமுமான சட்டங்களை எதிர்க்க விலையா?

ஜஸ்டிஸ் கட்சியில் உள்ள தனிப்பட்ட நபர்களில் சிலர் யோக்கியர்கள் அல்லவென்றே வைத்துக்கொள்வோம்.

சுயராஜ்யக் கட்சியிலும், ஒத்துழையாமைக்கட்சியிலும உள்ளவர்கள் எல்லாம யோக்கியர்கள் தானு? ஒருவர் கூட அயோக்கியர்கள் இல்லையா? என்று கேட்கிறோம்

ஜஸ்டிஸ் கட்சியில் சிலர் வயிற்றுப்பிழைப்புக்காரர்கள் இருக்கிறார்களென்றே வைத்துக்கொள்வோம.

சுயராஜ்யக் கட்சியில் உள்ளவர்கள் எல்லோருமே தேசபக்தர்கள் தானு? ஒருவராவது வயிற்றுப் பிழைப்புக்காரர இல்லையா? வென்றுதான் கேட்கிறோம்.

ஆகவே, எந்த வழியிலும் "சுயராஜ்யக் கட்சியாரை" விட "ஜஸ்டிஸ் கட்சியார்" எந்த வகையில் குற்ற மானவர்கள்?

கொள்கையைப்பற்றிப் பேசுவதானாலும் "ஜஸ்டிஸ்" கட்சிக்கொள்கையானது வேறு எந்தக்கட்சிக்கொள்கைக்கு இளைத்ததாயிருக்கிறது?

யோக்கியமான பொது மனிதன் கிடைப்பானானால் எல்லாக் கட்சி கொள்கைகளையும் விட ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கைகளையே உயர்ந்தது என்று சொல்லுவான். உயர்ந்ததாக இல்லா விட்டாலும், எந்த கொள்கைக்கு மட்டம் என்று சொல்லக்கூடும்?

ஆகவே, கிளர்ச்சியும், வேஷமும், யோக்கியப் பொறுப்பில்லாதவர்களின் புரட்டுகளையும் நம்பி பாமர மக்கள் ஏமாந்து "கங்காதரா மாண்டாயே" என்று கத்துவதுமல்லாமல், வேறு என்ன காரியத்தைக்கண்டு குற்றம் சொல்லக்கூடும்?

ஒரு சமயம் பார்ப்பனர்களை "ஜஸ்டிஸ்" கட்சியில் சேர்த்துக்கொள்வதில்லை, இது ஒரு வகுப்பாரைத் தள்ளிவைக்கும் கட்சியாய் இருக்கிறது, ஆதலால் அது சரியான கட்சி ஆகாது என்று சிலர் சொல்லக்கூடும்.

முஸ்லீம்லீக் எல்லோரையும் சேர்த்துக்கொள்ளுகிறதா? அந்த காரணத்திற்காக அதையாராவது வெறுக்கப்பிரயத்தனப் படுகிறார்களா? அதை யாராவது குற்றம் சொல்லுகிறார்களா? அந்த மந்திரி சபையை அழிக்க யாராவதுபிரயத்தனப் படுகிறார்களா? அதை அழிக்கப் பிரயத்தனப்படுகிறவர்களுடன் எந்த முஸ்லீமாவது சேருகிறார்களா?

எனவே, அந்த வழியிலும் பார்ப்பனர்களை சேர்த்துக் கொள்ளாததால் ஒரு கட்சியையோ, சங்கத்தையோ அழிக்க வேண்டுமென்பது ஞாயமில்லை என்பதும் யோக்கியர்களுக்கு விளங்காமல் போகாது.

ஆகவே, ஜஸ்டிஸ் கட்சியார் மந்திரியார் வந்து விட்டால் என்ன முழுகிப் போய் விடும்? அவர்கள் மந்திரித்துவத்தை எந்த ஜனங்கள் வேண்டாமென்று சொல்லி விட்டார்கள்.

பின்னை எந்த கட்சியின் மந்திரித்துவத்தை ஜனங்கள் விரும்பி அவர்களையே மந்திரிக்கு லாயக்கானதுபடி தெரிந்தெடுத்திருக்கிறார்கள். 30-பேர்கள் உள்ள ஒரு கூட்டத்தின் மந்திரித்துவத்தையே ஜனங்கள் வேண்டாம் என்று சொல்லிவிட்டதாகக் கருதப்படுமானால் ஏழு பேர்கூட இல்லாததான கூட்டத்தின் மந்திரித்துவத்தையா ஜனங்கள் விரும்பினதாகக்கருதுவது?

ஜஸ்டிஸ் கட்சியார் இந்த மந்திரி சபை கலைந்தால், மறுபடியும்இந்தசபைக்கு மந்திரிகளாய் வருவதில்லை என்று சொன்னால், "இந்த சபை கலைந்து மறுதேர்தல் ஏற்பட்டு மறு தேர்தலில்வந்து விடுவார்கள், ஆதலால் இந்த சபையை கலைக்கவிட மாட்டோம்" என்று சொல்வதில் எவ்வளவு பேடித்தனமும் ஆண்மையற்ற தனமும அயோக்கியத்தனமும் இருக்கிறது என்று யோசித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

மறுதேர்தல் வந்தால், மறு தேர்தலில் ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்டால் தானே, அதுவும் மந்திரிகளாக இவர்களே வர வேண்டும என்று ஜனங்கள் விரும்பினால் தானே இவர்கள் வரக்கூடும்.

ஆதலால் சுயராஜ்யக் கட்சியார் என்கிற பார்ப்பனர்கள் இப்படிச் சொல்லுவதிலிருந்தே மக்கள் சுயராஜ்யகட்சியாரின் அயோக்கியத்தனத்தைத் தெரிந்து கொண்டார்கள் என்பதும், ஜஸ்டிஸ் கட்சியாரை இன்னும் அதிகமாகத்தெரிந்தெடுக்காமல் போனமுட்டாள் தனத்திற்காக வருந்துகிறார்கள் என்பதும், முன் தேர்தலில் சுயராஜ்யகட்சியாருக்குத்தேசீயகட்சிஎன்றும, அரசியல் கட்சி என்றும் நினைத்து ஆதரவுகாட்டியவர்களும், உதவி செய்தவர்களும்,பிரசாரம் செய்தவர்களுமான ஆசாமிகள் இப்போது வெட்கப் படுகிறார்கள் என்பதும், இவர்கள் உதவி அடுத்த தேர்தலுக்குக்கிடைக்காது என்று சுயராஜ்யக்கட்சியார் முடிவு செய்துகொண்டார்கள் என்பதும, இதிலிருந்தே விளங்கவில்லையா? என்று கேட்கிறோம்.

## வெட்கப்படுகிறார்கள்.

சென்னை சுயராஜ்யக் கட்சியில் உள்ள பல பார்ப்பனரல்லாதார் அக்கட்சியில் இருப்பதற்காக இப்போது வெட்கப் படுகிறார்கள் என்று நன்றாய்த் தெரிகிறது. அவர்கள் யாரென்று பொது ஜனங்கள் அறிய ஆசைப்படுவது சகஜம் தான். நாம் அதை தெரியத்தேற ஒரு குறியை காட்டுகிறோம் அதாவது, சுயராஜ்யகட்சியில உள்ள பார்ப்பனரல்லாதார்களில் யார் யார் உள்ளதற்குள் யோக்கியர்கள் என்று பெரும்பான்மையோர்களால் நினைக்கப்பட்டார்களோ, அவர்களில்பெரும்பான்மையோரும், இனி அந்தக் கட்சியில் இருந்தால் அடுத்த தேர்தலில் தங்களுக்கு ஸ்தானம் கிடைக்காமல் போய் விடுமோ என்பவர்களில் சிறுபான்மையோரும் சேர்ந்து இப்போது தனிக்கட்சி ஏற்படுத்தலாமா அல்லது ஜஸ்டிஸ்கட்சியையே சுவாதீனப்படுத்திக் கொள்ளலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த சமயத்தில் ஜஸ்டிஸ் கட்சியார் புத்திசாலிகளாகவும் உண்மையாய் பார்ப்பனரல்லாதாருக்கும் உழைப்பவர்களாயிருந்தால் ராஜீய அபிப்பிராய பேதத்தையும், சுயநலத்தையும், சொந்த விரோதத்தையும, மூட்டை கட்டி வைத்து விட்டு, வருகிறவர்களை மனப்பூர்வமாக வரவேற்பார்களாக.

## ஒரு விசேஷம்.

சென்னை சட்ட சபையில் மந்திரிகளின் மீது நம்பிக்கை இல்லாத தீர்மானம் வந்து விவாதம் நடந்த காலத்தில் ஜனாப் அப்பாசலி பேசும்போது "இண்டிபெண்டண்ட் கட்சியார்களும் மந்திரிகளும யாதொரு முக்கியமான வேலை செய்யாவிட்டாலும் வேட்டை நாய்கள் போன்ற சுயராஜ்யக் கட்சியாரை பெட்டிக்குள் பாம்பு அடங்கினதுபோல் செய்து அவர்களின் தடை வேலைகளையும் தேசீய வேஷங்களையும் மூட்டை கட்டி வைக்கச் செய்து விட்டோமே, இதைவிட வேறு என்ன செய்யவேண்டு" மென்று பேசிக்கொண்டே வரும்போது ஸ்ரீமான் சத்தியமூர்த்தி மந்திரி கனம் சுப்பராயனைப் பார்த்து உங்களுக்கு உள் உளவாயிருந்ததற்கு இப்படித்தானா சபையில் எங்கள் மானத்தைக் கெடுப்பது என்று ரகசியமாய் கெஞ்சினாராம். கனம் சுப்பராயன் உடனே ஜனாப் அப்பாசலிக்கு ஜாடை காட்டி, தன்னை உட்காரச் சொன்னாராம் இந்த காட்சியைப்பார்த்து சட்ட சபையிலுள்ள மந்திரிகளுள் பட எல்லாக் கட்சியாரும் சிரித்தார்களாம. ஐயோ பாவம்சுயராஜ்யக் கட்சியின் நிலைமை இப்படி ஆகிவிட்டது!

## வேண்டுகோள்.

தஞ்சை ஜில்லாவில் சுற்றுப்பிரயாணம் செய்யும் நண்பர் சிற்சில இடங்களில் சிலர் படங்களை நெருப்பிற் கிரையாக்கியதாக திராவிடன் பத்திரிகையில் காணப்படுகிறது. இதை நாம் பலமாய் ஆக்ஷேபிப்பதற்காக மன்னிக்க வேண்டுகிறோம் இம்மாதிரியான காரியம் நமக்கு ஒரு பலனையும் தராததோடு, மனித சமூகத்திற்கு திருப்தி அளிக்காது என்றும் வணக்கமாய்த் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அக்குறிப்பிட்ட கனவான்களிடம் நமக்கு எவ்வித துரோகமும் இருக்க நியாயமில்லை. அவர்கள் மோசங்களையும் தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும்தான் நாம் வெளிப்படுத்தி அதுகளுக்கு யோக்கியதை இல்லாமல்செய்ய வேண்டுமேயொழிய அந்த நபர்களிடம் விரோதங்கொள்வது நியாயமல்ல. ஆதலால் இனி அம்மாதிரியான சம்பவங்கள் நடைபெறக்கூடாது என்று எதிர்பார்க்கிறோம். தவிர கூட்டங்களில கலவரம் செய்விப்பதும் ஒழுங்கல்லவென்றே நினைக்கிறோம். யார் வந்து எதை வேண்டுமானாலும் பேச நாம் இடம் கொடுக்க வேண்டும். நமக்கு ஆண்மை இருந்தால் அக்கூட்டத்திற்கு இடைஞ்சல் இல்லாமலும், கூட்ட முறைக்கு விரோதமில்லாமலும் கேள்வி கேட்கவோ, அக்கூட்டத்திலேயே பேச அனுமதிகேட்டு பேசவோ செய்யலாம். கேள்வி கேட்கவும் பேசவும் அனுமதி கிடைக்கா விட்டால் கண்ணியமாயிருந்து மறுநாள் கூட்டம் கூட்டி இதைப்பற்றி பேசலாம், கண்டிக்கலாம் சமாதானம் சொல்லலாம், இதுகள் தான் யோக்கியர்களுக்கழகு. அப்படிக்கில்லாமல் கூட்டத்தில் கலவரம் செய்வது என்பது, கலவரம் செய்பவர்களையும், அவர்களது கொள்கைகளையும் பலக்குறைவாக்கி விடுகிறதோடு, பேசுபவர்களுக்கு யோக்கியதையை உண்டாக்கி விடுகிறது. நாம் போன இடங்களிலும், இரண்டொரு இடங்களில் இம்மாதிரி சிலர் முயர்ச்சித்தும் நாம் சவுகரியப்பட்ட இடங்களில் எல்லாவற்றிற்கும் இடம் கொடுத்து சமாதானம் சொன்னதில் கேட்க வந்தவர்கள் நமது கொள்கையை ஏற்றுக் கொள்ள நேர்ந்ததோடு, நமது கொள்கைகளுக்கு முன்னிலும் அதிகமான பொது ஜன ஆதரவு கிடைத்ததேயல்லாமல் நஷ்டம ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை. கேள்விக்கு சமாதானம் சொல்லமுடியாதவர்கள் வெளியில் போய் பேசுவது என்பது கேவலமான காரியம் என்று தான் சொல்லவேண்டும். நமது கொள்கைகளும் தீர்மானங்களும் நம் மனதிற்கு உறுதி உள்ளதானால் யாருடைய கேள்விக்கும் பதில் சொல்லலாம் நமக்கே உறுதி இல்லாமல் மற்றோரை ஏமாற்றுவதானால் மாத்திரம் பதில் சொல்லுவது கஷ்டம்தான். ஆகையால் மற்றவர்களைப்பற்றி கவலை இல்லாமல் நமது கட்சியைப் பொறுத்தவரையிலாவது ஒழுங்காய் நடந்து கொள்ள வேண்டும். யார் வந்தாலும் தாராளமாய்ப்பேச இடந்தரவேண்டும என்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

## கோயமுத்தூர் ஜில்லா மகாநாடு.

கோயமுத்தூர் ஜில்லா பார்ப்பனரல்லாதார் 4-வது மகாநாடு மே-மீ 14, 15 தேதி சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் ஸ்ரீமான் திவான் பகதூர் குமாரசாமிரெட்டியாரவர்கள் அக்கிராசனத்தின்கீழ் நடைபெறும் எனவும், இம்மகாநாட்டில் பார்ப்பனரல்லாதாருள் சிலருக்கிருக்கும் ராஜீய அபிப்பிராயபேதங்களை மாற்றி சுயநலமில்லாத எல்லாப் பார்ப்பனரல்லாதாரும் சமூக முன்னேற்றத்தை பொறுத்தவரை ஒன்றுபிருந்து உழைக்கத்தக்க ஒரு வழியைக்காண ஏற்பாடு செய்ய சிலர் யோசித்து வருகிறார்கள் எனவும் தெரிய வருகிறது.

## ஸ்ரீமான் நாயக்கர்.

இம்மாதம் 7-தேதி கோயமுத்தூருக்கு ஜில்லா மகாநாடு விஷயமாய் போய்விட்டு 8-தேதி ஈரோடு வந்து 9-தேதி புறப்பட்டு வாலாஜாபாத்துக்கும் 11-தேதி சென்னைக்கும் 12-தேதி திருவள்ளூருக்கும் போய் விட்டு 13 அல்லது 14-உ ஈரோடு வந்து சேருவார். அடுத்த வாரம் 15, 16, 17-தேதிகளில் கோயமுத்தூரில் நடக்கும் நாயுடு சங்க கான்பரன்சுக்குப் போவார்.

7-ம் பக்கத் தொடர்ச்சி

ரின் பணம் சுமார் 15 கோடி அதாவது 1500 லட்சம் ரூபாய்களில் பெரும்பாகம் இயந்திர சாமான் முதலியவைகளுக்காக சீமைக்கும், பெரும்பாகம் வெள்ளைக்கார உத்தியோகத்திற்காக சீமைக்கும், பெரும்பாகம் பார்ப்பனர்கள் உத்தியோகஸ்தர்களுக்கென்றும் சம்பளமாக நமது நாட்டு பார்ப்பனருக்கும் இதன் பலன் கொஞ்சநஞ்சம் உள்ளதை நிலத்திற்கு உடையவர்கள் என்கிற முறையில பார்ப்பன பென்ஷன் தார்கள், பார்ப்பன உத்தியோகஸ்தர்கள், பண மிராஸ்தாரர்களுக்குமே போகிறது என்பதில் என்ன ஆட்சேபனை இருக்கிறது. ஏதோ சில பாகம் கண்ட்ராக்டர்களுக்குப் போகலாம், ஆனாலும் "தோசைக்காரியிடம் மாவு விலைக்கு வாங்கினதுபோல" உத்தியோகஸ்தர்களுக்கு மூன்று பாகமும் கண்ட்ராக்டர்களுக்கு ஒரு பாகமும் இருக்கலாமே ஒழிய அதுவும் வயிறுரச்சாப்பிடக் கூட கிடைக்காது இம்மாதிரியான வேலைகளில் அனுபோகமுள்ளவர்களும், நிபுணர்களும் இல்லையென்கிறதினாலும், கிடைக்கிறவர்களையும் வேலைவாங்க இஷ்டப்படாததினாலும் இந்த திட்டம் ஒழுங்காய் நடைபெறுமோ? நடுத்தூக்கில் ஏதாவது மோசம் செய்துவிடுமோ என்று பயப்படாமல் இருக்கவும் இடமில்லை. இவைகளெல்லாம் எதைக்காட்டுகிறதென்றால் "நமது பைத்தியக்காரத் தனத்தை." வெள்ளைக்காரரும், பார்ப்பனர்களும் ஒன்று சேர்ந்துகொண்டால் மேட்டூர் திட்டம் பகற்கொள்ளை மாத்திரமல்ல, நம்மையெல்லாம் மேல்லோகத்திற்கு அனுப்புகிற திட்டம் கூட சுலபத்தில் நடத்தி விடலாம் என்றும் கூட சொல்லலாம்.

## சென்னை சுயராஜ்யக் கக்ஷியார்மீது நடவடிக்கை.

ஸ்ரீமான் கோவிந்தாச்சார்லு என்கிற காங்கிரஸ் கமிட்டி மெம்பர், சென்னை சுயராஜ்யக் கட்சியார்களைப்பற்றி அடியில் கண்டபடி ஒரு தீர்மானம் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு அனுப்பியிருக்கிறார்.

"சென்னை சட்ட சபையின் சுயராஜ்யக்கக்ஷியார் கௌஹாத்தி காங்கிரஸ் தீர்மானத்திற்கு விரோதமாக நடந்து கொண்டிருந்ததலால் (மந்திரிகள் சம்பளத்தை மறுக்க இணங்காததால்) அவர்கள் தங்கள் ஸ்தானங்களைக் காலி செய்யும்படி இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது."

மற்றொரு பிரேரேபணை. மசூலிப்பட்டணம் காங்கிரஸ் கமிட்டி மெம்பர் ஸ்ரீமான் பி. லக்ஷிமிபதி சாஸ்திரி பின்வரும் பிரேரேபணையை கிருஷ்ணா ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக்கு அனுப்பியிருக்கிறார்.

"மந்திரிகள் சம்பளத்தைப் பற்றி சென்னை சட்ட சபையில் விவாதம் வந்த காலத்தில், சுயராஜ்யக்கக்ஷியார் நடந்துகொண்ட மாதிரியைப் பற்றி அவர்கள் மீது ஒழுங்கு முறை தவறிய குற்றத்திற்காக நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படியாக அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு இக் கூட்டம் சிபார்சு செய்கிறது"

## காங்கிரஸ் துரோகம்.

மராட்டா பத்திரிகையின் வருமாறு எழுதுகிறது.

காங்கிரஸ் சரித்திரத்தில், சென்னை மந்திரி சபை அமைப்பையும், அதன் வாழ்வையும் போல் துயரகரமான, அவமானத்துக் குரிய அத்தியாயம் வேறில்லையெனலாம். முதலிலிருந்து கடைசிவரை இவ்விவாரம் சகிக்கமுடியாத துர்நாற்றம் வீசுவதாயிருக்கிறது. எந்தக் காங்கிரஸ், மந்திரி சபை ஏற்படாமல் தடுக்கவேண்டுமென்று தீர்மானித்ததோ, அக்காங்கிரஸின் அக்கிராசனர் சென்னைக் காங்கிரஸ்காரர்களின் தலைவர். சென்னைகாங்கிரஸ்காரர்கள்தான் கௌஹாத்தி காங்கிரஸ் தீர்மானங்களை உருப்படுத்துவதில் முதன்மையாயிருந்தவர்கள். ஆனால் நடந்ததென்ன? ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரைத் தலைவராகக்கொண்ட காங்கிரஸ்காரர்கள் வெட்கமின்றி அம்மந்திரிசபையைத் தாங்கி நிற்கிறார்கள்.

## வைசியர்களுக்கு சுயமரியாதை உதயம்.

சேலம் ஜில்லாவைச் சேர்ந்த ஆத்தூருக்கு சங்கராச்சாரியார் என்கிற ஒரு பார்ப்பன "சந்நியாசி" சாமியார் விஜயம் செய்திருந்த காலத்தில் அங்குள்ள பார்ப்பனர்களுக்கு மாத்திரம் சாமியார் தன் கையால் தீர்த்தம் கொடுத்து விட்டு பார்ப்பனரல்லாதாருக்கு தன் கூட வந்த வேறு ஒரு பார்ப்பனரைக் கொண்டு தீர்த்தம் கொடுக்கச் சொன்னதாகவும், அங்குள்ள வைசிய செட்டியார்மார்கள் தங்களுக்கும் சுவாமியாரே தன்கையால் தீர்த்தம் கொடுக்க வேண்டும் என்றும் அப்படி கொடுக்காவிட்டால் தங்களுக்கு தீர்த்தம் வேண்டியதில்லையென்றும் சொன்னதின் பேரில், சுவாமியாரும்தான் நேரில் தீர்த்தம் கொடுக்க சம்மதிக்காததால் வைசியர்கள் வெளியேவந்து விட்டார்கள், சுவாமியாரும் ஆகாரம் கூட எடுத்துக் கொள்ளாமல் அவ்விடம் விட்டு திடீரென்று புறப்பட்டு விட்டாராம்.

## மகாத்மாவின் தேக அசௌக்கியம்.

மகாத்மா காந்தி அசௌக்கியமாக இருப்பதாகவும் அவருடையதென்னாட்டுச்சுற்றுப் பிரயாணம் பாதிக்கப்படும் என்பதாகவும் பொதுவாய் தெரிய வருகிறது. ஆனாலும் அவருடைய சிஷ்ய கோடிகள், அதாவது அவரைக் கொண்டு வந்து ஆட்டிவைத்து யோக்கியதையும் பணமும் சம்பாதித்துக் கொள்ள நினைத்திருப்பவர்கள், அந்த விபரத்தைப் பற்றி ஜனங்கள் சரியாய் உணருவதற்கு இடமில்லாமல் குழப்பமடையும்படியாகவும், முன்னுக்கு பின் முரணாகவும் ஏமாற்றுத் தந்திகள் அடித்தவண்ணமாயிருக்கின்றார்கள். காயலாவினுடைய உண்மையையும் சரியாய்த்தெரியப்படுத்தாமல் ஏதேதோ தந்திரமாயும் மூடு மந்திரமாயும் தெரிவித்து வருகிறார்கள்.

ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரி தந்தியை விட்டு விட்டு, ஸ்ரீமான் தேசாய், நியானியிலிருந்து கொடுத்திருக்கும் தந்தியை பார்க்கும் பக்ஷத்தில் மகாத்மாவுக்கு மூளைக் கொதிப்பும், ரத்தோட்டக் குறைவும், கைகால் சரியான சுவாதீன மற்ற தன்மையும் காட்டுகிறதாகவும், தக்க ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று டாக்டர்கள் அபிப்பிராயம் கொடுத்திருப்பதாகவும், குறைந்தது இனியும் இரண்டு மூன்று மாதத்திற்கு அதாவது கோடை கால முழுவதற்கும் ஓய்வு எடுத்துக் கொண்டு சுற்றுப்பிரயாணத்தை நிறுத்த வேண்டுமென்று சொன்னதாகவும் தெரிய வருகிறது. கடைசியாய் ராகூம் போது தற்காலம் மகாத்மா சுற்றுப்பிரயாணம் நிறுத்தப்பட்டதாகவே முடிந்து விட்டது எனினும், இனியும், சுமார் இரண்டு மூன்று மாதம் பொறுத்தாலும் மகாத்மா நமது நாட்டுக்கு வரும்போது நாம் நமது கடமையைச் செய்து வரவேற்கத் தயாராயிருக்க வேண்டும்.

## சந்தனக்கட்டை கேசு.

கோயமுத்தூர் ஜில்லா பவானி தாலூகாவைச் சேர்ந்த அந்தியூர் ஸ்ரீமான் துரைசாமி ரெட்டியார் முதலிய 4, 5 பேர்கள் மீது சர்க்கார் சந்தனக்கட்டைகளை திருடினதாகக்கேஸ் ஏற்பட்டு 2, 3 வருஷகாலமாய்த் துப்பு கண்டு பிடித்து சர்க்காருக்கு சுமார் 50-ஆயிரம் ரூபாயும் ஸ்ரீமான் ரெட்டியாருக்கு சுமார் லக்ஷரூபாயும் செலவாகி கடைசியாய் கோயமுத்தூர் செஷன் கோர்ட்டாரால் 2, 3 கேசாக விசாரித்து தண்டிக்கப் பட்டார். முதல் தடவை தண்டித்ததின் பேரில் அபீல் செய்ததில் ஐகோர்ட்டில் விடுதலை ஆகிவிட்டது. அதன் பேரில் மற்றொரு கேசில் மறுபடியும் 2-வருஷம் தண்டிக்கப்பட்டது. அதன் பேரிலும் அபீல் செய்ததில் அதுவும் விடுதலையாய் விட்டது. ரெட்டியாருக்கு சுமார் லக்ஷம் ரூபாய்வரை செலவு செய்ய சக்தி இருந்த படியால் தண்டனையிலிருந்து தப்பி நிரபராதி என்று நிரூபித்துக் கொள்ள முடிந்தது. பணமில்லாமலிருந்தால் தண்டனை அனுபவித்திருக்க வேண்டியதுதான். ரெட்டியாரைப்போல் செலவு செய்ய சக்தியும் தைரியமும் மார்க்கமும் இல்லாதவர்கள் எத்தனைபேர் இன்றையதினம் அநியாயமாய் ஜெயிலில் அடைபட்டிருக்கிறார்கள் என்பது கடவுளுக்குத்தான் தெரியும்.

பிரிட்டிஷ் நீதியின் நேர்மை என்னே! என்னே!

6ம் பக்கத் தொடர்ச்சி.

### "நவசக்தி"

வாழ்விற்கு ஒழுக்கம் இன்றியமையாதது. 1916ம் ஆண்டு தொட்டுக் காங்கிரஸில் பிளவும் பிரிவும் வேறுபாடும் மாறுகோளும் நிகழ்ந்து வாலாயின. அவை காரணமாகச் சிலர் காங்கிரஸினின்று விலகி வாளாகிடக்கிறார்; சிலர் தனித்தனிய அமைப்புகள் கண்டு உழைத்து வருகிறார். டாக்டர் அன்னி பெஸண்ட் அம்மையார், டாக்டர் நாயர் முதலியோர் காங்கிரஸினின்றும் விலகித் தனித்தனி இயக்கங்களைத் தோற்றுவித்தது எவரும் அறிந்ததொன்று.

இந்நிலையில் கௌஹாத்தியில் காங்கிரஸ் கூடிற்று. அக்காங்கிரஸ்- சுயராஜ்யக் கட்சியார் மந்திரிப்பதவி ஏற்றலாகாதென்றும், மற்றக்கட்சியார் அப்பதவி ஏற்பினும் அதைத் தாக்கி உடைக்கவேண்டுமென்றும், தீர்மானம் செய்தது. அத்தீர்மானத்தின்படி நடைபெற வேண்டுவது காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியார் அரசியல் ஒழுக்கமாகும். இரட்டை ஆட்சியை உடைக்க வேண்டிய காங்கிரஸ் சுயராஜ்யக்கட்சியார் அவ்வாட்சிக்கு ஆதரவு நல்கி வருகின்றார். காங்கிரஸ் கொள்கை சென்னை காங்கிரஸ்- சுயராஜ்யக் கட்சியாரால் கொல்லப்பட்டது. சுயராஜ்யக் கட்சியார் இரட்டை யாட்சிக்குத் துணைபுரிவது? அந்தோ! கொடுமை! கொடுமை!

சென்னை சட்டசபையில் மந்திரிமார் மீது நம்பிக்கையின்மை தீர்மானம் சுயராஜ்யக் கட்சியாரால் கொணரப் பெற்றிருத்தல் வேண்டும். அத்தீர்மானம் அவர் கொணராதிருந்தது முதற் குற்றம்.

சுயராஜ்யக்கட்சியார் இரட்டை ஆட்சியைத் தகர்க்க முயலாதொழியினும், வேறொரு கட்சியார் மந்திரிமார் மீது நம்பிக்கையின்மை தீர்மானம் கொணர்ந்தனர். அவருக்குத் துணைநின்று இரட்டை ஆட்சியைக் குலைக்கவேண்டுவதே காங்கிரஸ்- சுயராஜ்யக் கட்சியார் கடன்.

ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீமான் முனிசாமி நாயுடு அவர்கள் நம்பிக்கையின்மை தீர்மானம் கொணர்ந்தனர். அத்தீர்மானத்தை ஆதரிக்கக் காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியார் ஏன் முன்வரவில்லை? ஜஸ்டிஸ் கட்சிக்காரர் மீது பழி சுமத்தி இரட்டை ஆட்சியை வாழ்த்தி வளர்த்துக்கொண்டிருப்பது காங்கிரஸ்- சுயராஜ்யக் கட்சியல்லவா? இது காங்கிரஸ் கட்டளையை மீறி நிற்பதாகாதோ?

தேர்தலின் போது வாக்காளர்க்கு என்ன சொல்லப்பட்டது? இரட்டை யாட்சி முறியடிக்கப்படும் என்று தேறு பறை சாற்றப்பட்டது? இப்பொழுது இரட்டை யாட்சி முறியடிக்கப்பட்டதா என்று கேட்கிறோம். முன்னர் ஜஸ்டிஸ் கட்சியார் துணைகொண்டு இயங்கிய ஆட்சிமுறை. இப்போது சுயராஜ்யக் கட்சியார் துணைகொண்டு இயங்குகிறது. இரட்டையாட்சியைக் கொல்லுதல் வேண்டுமென்பதே காங்கிரஸ் நோக்கம்; வாக்காளர் நோக்கம்; தேசத்தின் நோக்கம். அந்நோக்கத்துக்கு முற்றும் மாறாகச் சென்னை சட்டசபை காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியார் நடந்திருக்கிறார்.

தேர்தல் காலத்தில் ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார் "ஒத்துழைப்புக் கொள்கையுடைய எவராயினும் அவர் சேர்ந்த கட்சியை உடைத்தெறிதல் வேண்டும். அதன் பொருட்டு நாங்கள் முயன்று வருகிறோம். எங்களுக்கு வாக்களியுங்கள்" என்னுங் கருத்துப்பட நூற்றுக்கணக்கான கூட்டங்களில் பேசியுள்ளார். அப்பேச்சுப்படி இப்பொழுது வினை நிகழ்கிறதா? இப்பொழுது சுயேச்சைக் கட்சிக்காரர் மந்திரிபதவியில் வீற்றிருக்கிறார். அவர் ஆதரவு கொண்டு இரட்டை யாட்சி இயங்குகிறது. அவர் ஜஸ்டிஸ் கட்சி வேலையைச் செய்கிறார். அவர்க்குச் சுயராஜ்யக்கட்சியார் துணை செய்கிறார். ஆகவே எல்லோரும் ஜஸ்டிஸ் கட்சிக்காரராகி விட்டார். பிராமணர் பிராமணரல்லாதார் வேற்றுமையென்று விலக்கப்பட்டால், அரசியல் கொள்கையில் எக்கட்சிக்கும் வேற்றுமையிருப்பதாகத் தெரியவில்லை. எல்லோரும் அதிகாரவர்க்கத்தோடு ஒத்துழைப்பவராகி விட்டனர். தேசம் ஏமாந்து விட்டது.

தேர்தலில் வெற்றிபொன்ற துறக்கொண்டு வீரம்பேசிச் செயலில் அதிகாரவர்க்கத்தை ஆதரிக்கக் காங்கிரஸ் சுயராஜ்யக்கட்சியார் முனைந்து நிற்பதை நாளடைவில் தேசம் உணர்ந்து கொள்ளும். சுயராஜ்யக்கட்சியார் அதிகாரவர்க்கத்துடன் கலந்துவிட்டனர். வெற்றி அதிகாரவர்க்கத்துக்கும், தோல்வி காங்கிரஸுக்கும் நேர்ந்திருக்கின்றன. இத்தோல்விக்குக் காரணம் தேசமன்று சட்டசபை நுழைந்து ஆட்சிமுறையை குலைக்கப்போவதாகப் புறப்பட்ட கட்சியேயாகும். அரசியல் ஒழுக்கம் இந்நிலையிலிருக்கிறது. சுயராஜ்யக்கட்சியார் சட்டசபைகளில் நடந்து வரும் தன்மை காங்கிரஸ் ஆதிக்கத்தைக் கெடுப்பதாகும்.

### "தேசபந்து"

சொல்வதொன்று செய்வதொன்றுமென்பது உபமக்கள் செயலாகாது வஞ்சகர், கபடர், முதலாயினாது செயலே. அப்படி வாக்களிக்கப்பட்டும் இரட்டை ஆட்சியை உடைக்கப்போவதாகச் சென்னை சட்டசபையில் புகுந்த சுயராஜ்யக்கட்சியார், தமக்கு சமயம் வாய்த்தபோது ஏன் செய்யவில்லை? இந்த மந்திரி சபை போனால் ஜஸ்டிஸ் கட்சி மந்திரி சபை வந்துவிடுமே என்று பயப்படுகிறோமென்று சொல்வதானது பொருத்தமற்றதாகும்.

### "தமிழ நாடு."

"சுயராஜ்யக்கக்ஷி பகல் வேஷம் போடும் அயோக்கியக்கக்ஷி என்பது சென்ற வாரம் பகிரங்கமாய் தெரிந்துவிட்டது. சில சுயநலம் கெட்டவர்களின் கக்ஷியே சுயராஜ்யக் கக்ஷி. சென்றவாரம் மந்திரிகளின் மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானம் சட்டசபையில் கொண்டுவரப்பட்ட போது சுயராஜ்யக் கக்ஷியார் அதற்கு ஓட்டுக் கொடுக்காமல் ஜனங்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டார்கள். தேர்தல் காலத்தில் ஜனங்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறி இரட்டை ஆட்சியை ஆதரிக்கிறார்கள். இது யோக்கியமா அல்லது அயோக்கியத்தனமா? தேர்தல் முடிந்தபிறகு ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்காரும் அவருடைய சிஷ்யர்களும் இரட்டை ஆட்சியை உடைக்கப்போவதாக ஆர்ப்பாட்டம் செய்தார்கள். பிறகு இதுகள் எல்லாம் வெறும் ஹம்பக் என்பது அவர்களுடைய நடவடிக்கைகளில் இருந்து வெளியாய் விட்டது.

ஜஸ்டிஸ் கக்ஷி பிராமணரல்லாதார் கக்ஷி என்பதற்காகவே அதை சுயராஜ்யக் கட்சியார் எதிர்த்து அதைத் தோற்கடித்தவுடன், சட்டசபைக்குப் போவதும் சனாதனக்கடைக்குப்போவதும் ஒன்று, என்ற வைதிக ஒத்துழையாதாரான ஸ்ரீ ராஜகோபாலாச்சாரி, மிதவாதிகளான ஸ்ரீமான்கள் ரங்காச்சாரி, விஜயராகவாச்சாரியார், சமூக சீர்திருத்தக்காரரென்று தம்மைச் சொல்லிக்கொள்ளும் ஸ்ரீனிவாசய்யங்கார் தமிழருக்காக பத்திரிகை நடத்துவதாய்ச் சொல்லும் ரங்கசாமி அய்யங்கார் முதலிய சகலரும் ஒன்று கூடி யோசித்தே தங்களுக்குப் பிடித்தமான ஒரு மந்திரிசபையை அமைத்தனர்.

சென்னைக்குப் போனவுடன் மந்திரிசபையை உடைத்தெறியப் போவதாக ஸ்ரீமான் சத்தியமூர்த்தி காஜித்தார் ஆனால், இவர்கள் யோக்கியதையை பரீட்சிக்கவே "ஜஸ்டிஸ்" கட்சியார் நம்பிக்கையில்லாத்தீர்மானம் கொண்டுவந்தும் சுயராஜ்யக்கட்சியார் பேசாமலிருந்துவிட்டார்கள்.

சுதேசமித்திரன் இந்த அயோக்கியத்தனத்திற்கு மௌனம் சாதிக்கிறது. இவர்கள் தானா சுயராஜ்யத்திற்குப் பாடுபடும் காங்கிரஸ் பக்தர்கள்! இவர்கள் காங்கிரசுக்கு விரோதமாய் நடந்து விட்டதால் இவர்களை காங்கிரஸிலிருந்து விலக்கவேண்டும். இவர்கள் மேரில காங்கிரஸ் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

### "பாரமதி"

சென்னைக்கே மானக்கேடு

"சென்னை சட்டசபையில் உள்ள காங்கிரஸ் கட்சியார் மந்திரிகளின் சம்பள விஷயம் நடந்து வந்த காலத்தில் நடுநிலைமை வகித்தது போன்ற வெறுக்கத் தகுந்த காரியம் வேறு ஒன்றும் இல்லை. அது தைரியமின்மைக்கோ அல்லது அபிப்பிராயமின்மைக்கோ அல்லது இரண்டும் இன்மைக்கோ அடையாளமாகிறது.

தங்களுக்கான ஒரு முடிவில்லாமலோ அல்லது முடிவின்படி நடக்க முடியாமலிருப்பதோ, ஆனால் அப்படிப்பட்டவர்கள் சட்டசபையில் இருப்பது கொஞ்சமும் நியாயமில்லை, அப்படிப்பட்டவர்களுக்கு சட்டசபையும் இடமல்ல

சென்னை அதன் காங்கிரஸ் கட்சியைப் பற்றி வெட்கப்பட வேண்டும். சென்னை மாகாணம் வெட்கப்பட்டாலும், படாவிட்டாலும், நாம வெட்கப்படுகிறோம்."

---

## அகில இந்திய 3-வது நாயுடு கான்பரன்ஸ்

ஏப்ரல் மீ 15, 16 தேதிகளில் கோயமுத்தூர் வெரைட்டி ஹாலில் கூடும். நாயுடு குல சகோதரி சகோதரர்கள் எல்லோரும் விஜயம் செய்யுமாறு கோரப்படுகிறார்கள்.

## தமிழ்க் குருகுலம்.

தமிழ்க் குருகுலக் கமிட்டியின் காரியதரிசியான திரு. மு. காசிவிசுவநாதன் செட்டியார் நமக்குப் பின்வருமாறு எழுதுகிறார்:—

சேரமாதேவிக் குருகுல சம்பந்தமாக ஒரு கமிட்டி நியமிக்கப்பெற்றதை நண்பர்கள் அறிவார்கள். அக் கமிட்டி ஒரு வேலையும் செய்யவில்லையென்று சிலர் கருதுகிறார். இப்பொழுது ஒரு வேலையும் செய்யவில்லையென்பது உண்மைதான். அதற்குத் தக்க காரணம் உண்டு. மகாதேவ ஐயரிடமிருந்து குருகுலத்தைக் கைப்பற்றுவதற்குச் சில மாதங்கள் முன்பு தீவிரமாக இக்கமிட்டியாரால் முயற்சி செய்யப்பட்டதைத் தமிழ்நாட்டில் பல முக்கியஸ்தர் அறிவர். பிறகு அதை விடப் புது குருகுலமொன்றை நடத்தி வருதல் பெரும் பயனளிக்குமெனக் கருதி ஒரு குருகுலம் காண்பதாகக் கமிட்டியாரால் தீர்மானிக்கப்பட்டது. அது சம்பந்தமாகச் சில வேலைகளும் செய்திருக்கிறது. அது இப்பொழுதே தொடங்கப்படாததற்குக் காரணம் பலவாய் நாட்டிலுள்ள குருகுலப் பணம் இக்கமிட்டியார் வசம் வராமையே. குருகுலப் பணம் யாரிடம் எவ்வளவெவ்வளவு இருக்கிறதென்ற முழு விபரமும் இக்கமிட்டியாருக்கு இன்னுந் தெரியாது. கமிட்டியாரிடம் இப்பணமோ குருகுல சம்பந்தமான வேறு பொருள்களோ இல்லை. கமிட்டியார் அறிந்த சிலரிடம் இருக்கும் பணத்தைப்பெற ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அப்பணங்கள் கமிட்டியார் கைக்கு வந்த பிறகு குருகுல வேலை தொடங்கப்படும். பணம் கையில் இல்லாமல் ஒரு வேலையும் செய்ய முடியாதென்பது அனைவரும் அறிந்ததே. எனவே உண்மையை நுணுகி ஆராய்வோர் கமிட்டியார் மீது குறை கூறமாட்டாரென்பது உறுதி. கமிட்டி அங்கத்தவர்களிடமும் குருகுலப் பணம் சிறிதுமில்லை என்பதை ஞாபகப்படுத்துகிறேன். பினுங்கில் ஒரு அன்பரிடமிருந்த பணத்திலிருந்து செலவுக்காக ஒரு ஆயிரம் ரூபாய் வரவழைக்கப்பட்டது. இடையில் குருகுலத்தைக் கைப்பற்ற நடந்த முயற்சியின் பொருட்டும் புதிய குருகுல ஸ்தாபன முயற்சியின் பொருட்டும் ரூ. 1000-க்கு மேல் செலவாயிருக்கிறது. அதன் பொருட்டு நானும் குருகுலக் கமிட்டித் தலைவர் திருவாளர் வயி. சு. ஷண்முகஞ் செட்டியாரவர்களும் கடனாகக் கொடுத்திருக்கிறோம். கணக்கு விபரம் கமிட்டியில் வைத்து, அவர் அனுமதியின் பேரில் பத்திரிகைகளில் வெளிவரக்கூடும்.

தலைவர் தம் தலைமைப் பதவியை ராஜிநாமாச் செய்திருக்கின்றார். சிலரின் வீண் தூற்றுதலுக்கு அஞ்சியே அவர் ராஜிநாமாச் செய்திருக்கிறார் எனவே நான் உணருகிறேன். அப்பதவியை அவரே வகிக்கவேண்டுமென்று நான் அவருக்கு எழுதியிருக்கிறேன். தொடக்கமுதல் தமிழ்க் குருகுலத்தில் பேரார்வமுள்ள அவர் எனது வேண்டுகோளையேற்றுத் தலைமைப் பதவியைத் திரும்பவும் வகிப்பாரென்றே நம்புகிறேன். அவர் அங்கீகாரத்தை அடுத்தவாரத்திற்குள் அன்பர்கள் எதிர்பார்க்கலாம் என்பது எனது துணிவு. அவர் ராஜிநாமாக் கடிதத்தையும் எனது பதிலையும் அன்பர்கள் அறியும் பொருட்டுக் கீழே தருகின்றேன்.

குருகுலக் கமிட்டியைப் பற்றியும் அதன் நிர்வாகிகளைப் பற்றியும் வேண்டுமென்றே பழி சுமத்திச் சிலர் ஆங்காங்கு பொய்ப் பிரசாரம் செய்து வருவதாய் அறிகின்றேன். அவர் மீது எனக்குக் கோபமில்லை. உலகம் பலவிதம், அவரவர் இயல்புக்கேற்றபடி அவரவர் இருப்பர். பொதுஜனங்கள் நாளடைவில் உண்மையையுணர்ந்து, பொய்யர்கட்குப் புத்தி கற்பிப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் முடிக்கிறேன்.

கானாடு காத்தான் அக்ஷய பங்குனி 20-உ

திரு. மு. கா. காசிச் செட்டியாரவர்கள்,
காரியதரிசி, த. கு. கமிட்டி,
சிராவயல்.

அன்புடையீர்!

நமது கமிட்டி அமைப்பு முதல் இதுவரை ஒரு காரியத்திலும் கலந்து கொள்ள முடியாமல் எனது குடும்ப அலுவல்களைச் செய்து விட்டமைக்கு வருந்துகிறேன். நான் இம்மாதம் 21-உ. புதன்கிழமை மலாய் நாட்டுக்குச் செல்லுகிறபடியால், கமிட்டியில் வகித்த எனது தலைமைப் பதவியை ராஜிநாமாச் செய்கிறேன். குருகுலத்தையும் அதற்குரிய பொருளையும் கைப்பற்றித் திருந்திய முறையில் நடாத்தத் தீவிர முயற்சி செய்ய வேண்டுகிறேன். இதையே ராஜிநாமாவாக வைத்து, கமிட்டியாரிடம் ஆஜர் செய்யக் கோருகிறேன்.

இங்ஙனம் தங்களன்புள்ள,
வயி. சு. ஷண்முகம்.

---

திலகர்விலாஸ், சிராவயல்
பங்குனி 20-உ

திரு. வயி. சு. ஷண்முகம் செட்டியார் அவர்கள்,
கானாடுகாத்தான்,

அன்புடையீர்!

உங்கள் ராஜிநாமா கடிதம் கிடைத்தது. அதுபற்றி மிகவும் வருந்துகின்றேன். குருகுலத்தைச் சீர்ப்படுத்துவதில் பெரிதும் விருப்பமுள்ள நீங்கள் ராஜிநாமாக் கொடுத்துவிட்டு விலகிக் கொள்ளுதல் நியாயமில்லை என்று சொல்லவும் வேண்டுமோ?

மலாய் நாட்டுக்குச் சென்றால் சில மாதங்களில் திரும்பிவிடுவீர்களன்றோ? அக்காரணங்கொண்டு நீங்கள் ராஜிநாமாச் செய்ய வேண்டியதில்லை என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

சிலரின் வீண் புரட்சியை நீங்கள் பொருட்படுத்த வேண்டுவதில்லை. உங்கள் ராஜிநாமாவைத் திரும்பப் பெற்றுக்கொண்டு தலைமைப் பதவியை வகிக்க இசைவதாக, நீங்கள் எழுதும் கடிதத்தை எதிர் நோக்கி நிற்கின்றேன்.

உங்கள் அன்புள்ள,
மு. காசி. விஸ்வநாதன்.

---

## ஈரோடு மஹாஜனத் தமிழ்க்கழகம்.

இக்கழகம் சென்ற மூன்று மாதங்களாகச் சிறப்புப்பெற்று வாரந்தோறும் அரிய பெரிய உபந்நியாசங்களும், பிரசங்கங்களும், அதன் ஆதரவில் ஈரோடு மஹாஜன சரஸ்வதி ஹாலில் செவ்வனே நடைபெற்று வருகின்றன. ஈரோடு குடி அரசு உதவி ஆசிரியர், திருவாளர் வி. இராமசாமி நாயுடு அவர்கள் அநேக சொற்பொழிவுகள் நிகழ்த்தியிருக்கின்றார்கள். அன்னார் பல துறைகளிலும் பொதுநலத்திற்காக உவகையுடன் பாடுபடுமியல்புடையார். எளிய நடை உடைபாவனைகளைக் கொண்ட ஒரு அரிய தமிழன்பர்.

[illegible] பழனி உயர்தரக் கலாசாலையில் தமிழ்ப் பண்டிதர் ஸ்தானம் பெற்று அங்கு செல்கிறார். 3-4-27-தேதியாகிய அக்ஷய ஆண்டு பங்குனித் திங்கள் 21-நாள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் அன்னார் "வாலி வதமும், சுக்ரீவ பட்டாபிஷேகமும்" என்பது பொருளாக மிகவும் உருக்கமான சொற்பொழிவினை ஈரோடு ஸ்ரீமான் M. S. முத்துக் கருப்பஞ் செட்டியாரவர்கள் தலைமையில் நிகழ்த்தினார்கள்.

அவ்வமயம், நாயுடு அவர்கட்கு கழகச்சார்பில் ஒரு பிரிவுபசாரப் பத்திரம் வாசிக்கப்பெற்று, சிற்றுண்டி வழங்கி, புகைப்படமொன்றும் பிடிக்கப்பட்டது. ஈரோடு ஒரு உண்மை தேசபக்தரை, தமிழறிஞரை, தமிழரை விட்டுப்பிரிவதால் ஒருவாறு முற்போக்கில் குன்றியதென்பது மிகையாகாது. ஆயினும் ஸ்ரீமான் நாயுடு அவர்கள் அங்கும் பொதுஜன வாழ்வுக்கே ஈடுபட்டுச் செல்லுகிறாரென ஈரோடு வாசிகளும் அன்னாரின் நண்பர்களும் ஒருவாறு உளங்கொள்வாராக! என்று ஸ்ரீமான் தி. மு. சிவஞானம் பிள்ளை அறிவிக்கிறார்.

## திருநெல்வேலி ஜில்லாவில் கத்தர் பிரசாரம்.

இந்த ஜில்லாவில் உள்ள திசையன்விளை, தென்திருப்பேரை போன்ற இடங்களில் சன்ன நூலை, அதாவது ஸ்திரீகளுக்கு புடவை நெய்வதற்காக உற்பத்தி செய்யவேண்டி 1—4—27 தேதி முதல் சில கிராமங்களில் பிரசாரம் செய்து வருகிறேன். ஒத்துழையாமை இயக்கம் மும்முரமாக இருந்த காலத்தில் இப்பக்கத்திலும் சுமாராக நூல் நூற்கப்பட்டு வந்தது. கொஞ்ச காலமாக நூற்கும் தொழில்கள் நின்று போய்விட்டது. மறுபடியும் நூற்கும்படி செய்ய மிகவும் கஷ்டமாய் இருக்கிறது.

இது விஷயமாக நமதுடைய ஏஜண்டு ஸ்ரீமான் வி. எஸ். இராஜா செட்டியார் அவர்கள் கடந்த மூன்று மாதமாக மெத்த பிரயாசை எடுத்து வருகிறார். கூடிய சீக்கிரம் இந்த ஜில்லாவை திருப்பூர் பிரதேசம்போல் ஆக்கி விடலாமென்று நினைக்கிறேன். நம் தேசமக்கள் அனைவரும் ஆதரவளிப்பீர்களேயானால் சீக்கிரம் முன்னேற்றமடையும் என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. நாம் கோரும் ஆதரவானது இந்த ஜில்லாவில் உற்பத்தியாகும் சரக்குகளை எல்லோரும் வாங்கி உபயோகிக்கவேண்டும் என்பதே.

மா. வே. கருப்பண்ண செட்டியார்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கடமையாய்க்கொள்ளுங்கள். நிவர்த்தி தேவி நிச்சயம் பிரதிசனமாவாள், வேண்டும் வரமீவாள், என்று விளம்புகிறார்.

மகாத்மா இதைச் சொன்னதற்காக அடியும் உதையும் பட்டார். ஆசாரசுத்திறைவாசமும் பெற்றார். வட இந்தியப் பார்ப்பனரொருவர் சித்திரவதை செய்யவேண்டுமென்றார். தென்னிந்திய பார்ப்பனரொருவர் மண்டையில் மூளையில்லையென்றார். அடிகள் அஞ்சினரோ? இல்லை. கெட்டாவில் முட்டாள்கள் செய்தது கஷ்டமே யானாலும் சகிப்பதே கடமையெனக் கொண்டார். பஞ்சமர்கள் பார்ப்பனர் தீண்டாமை நிருவதை ஒவ்வி அக்கிரமம் தீர்வதானால் தாம் சித்திரவதைக்குடன்படுவதாயும் கூறினார். மக்களுக்குக் கஷ்டம் விளைவிக்க மலையின் சிறகை வீழ்த்தவானவர், தலைவனுக்கு தன் முதுகெலும்மைக்கொடுத்த ததீசி முனிவரைப் பெற்ற தாய் நாட்டின் தவப்புதல்வரென்பதைக் காட்டியுடனுவது அப்பார்ப்பனர் அவர் வழிக்கு வாராதது பற்றி யார்தான் வருந்தார்.

கனவான்களே! மனிதர் தாறுமாறல் மேவகத்தில் ஆகாயத்தில் பறக்கும் இவ்விருபதாம் நூற்றாண்டில் கைராட்டினமும் கதரும் நமது கஷ்டத்தை நிவர்த்தி செய்ய முடியுமென்று மகாத்மா காந்தி சொல்வது சரியாவென இன்னும் அநேகர் நினைக்கின்றார்கள். ஆனால் அக்காலத்தில் அனுமான் ஆகாயத்தில் ஆகாயமேல் மேகத்தில் பறந்தானென்றகதையைப் படித்தவர்களுக்கு இது ஆச்சரியமாகத் தோனுவதில்லை. நம் நாட்டின் பூர்வீக சரித்திரங்களைச் சரியாயுணர்ந்தவர்கள் ராட்டினத்தால் வறுமை தணிவதுடன், ஆத்மார்த்த ஞானமும் பெறுகுமென்று ஒப்புக்கொண்டிருக்கிறார்.

நம் பாடசாலைப்படிப்புகளே நமக்கு மக்குருட்டுத்தனமாக்கிவருகிறது. கழுதை கத்தும், நாய் குலைக்கும் என்பதே குழந்தைகளின் ஆரம்பப்படிப்பாயிருந்தால் தேசப் புனருத்தாரணத்தை அவர்கள் எப்படி அறிந்துகொள்ள முடியும்? அதற்காகத்தான மகாத்மா தேசீயக் கலாசாலைகளைத் திறக்கும்படி சொல்லுகிறார்.

நூறு வருஷங்களுக்கு முன் நமது கைத்தொழில் முறை எப்படியிருந்ததென்பதை எந்த மாணவர்க்காவது போதிக்கப்படுகிறதா? இல்லை.

கனவான்களே! 17-வது நூற்றாண்டில் நமயிந்தியாவை ஔரங்கசீப் ஆண்டு வருகிற காலத்தில், மிக அழகும் மிக மலிவுமுள்ள இந்தியச் சல்லாக்களும, மஸ்லின்களும், இங்கிலாந்தில் இறக்குமதி செய்யப்பட்டன. டக்காவிலிருந்து மட்டும் வருஷத்தில் முப்பது லட்ச ரூபாய்க்கு மஸ்லின்கள் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. இவைகளெல்லாம் எந்தக்கப்பலில் ஏற்றிக்கொண்டு போனார்கள்? இந்தியர்களால் செய்து இந்தியர்களால் நடத்திச்செல்லும் இந்தியக் கப்பலிலேயே ஏற்றிக்கொண்டு போனார்கள். இக்கப்பல்களைக் கண்ட இங்கிலாந்தின் நெசவுத் தொழிலாளர்கள் இங்கிலாந்தைமுற்றுகை போடவந்து விட்டதே வென்றெண்ணிப்பயந்தார்கள் 1700, 1701-ல் இங்கிலாந்தில் சல்லாக்களை தவிர மற்ற சல்லாத்தினுசுகளை உடுப்பாகவாவது வேறு விதமாகவாவது உபயோகப்படுத்தக் கூடாதென்று இரண்டு சட்டங்கள் செய்தார்கள். இதனால் பருத்தி சம்பந்தப்பட்ட வஸ்திரங்கள் தடுக்கப்பட்டு விட்டது.

இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாட்சி ஸ்திரமாய் ஏற்பட்ட பிறகும் இந்திய வியாபாரங்கள் இங்கிலாந்துக்குப் போய்க் கொண்டுதானிருந்தன.

இங்கிலாந்தில் உற்பத்தி செய்யப்பட்ட வஸ்திரங்களின் விலையைப்பார்க்கிலும் இந்திய வஸ்திரங்களை 100-க்கு 50 60 குறைவாக விற்று லாப மடையக் கூடுமென்று 1813 வருஷம் நடந்த விசாரணையில் சாட்சி சொன்னார்கள்.

அதன் பிறகு இந்திய ஜவுளிகளுக்கு 100-க்கு 70, 80 இறக்குமதி வரி விதிக்கப்பட்டது. இது பற்றியே சர் ஹென்றி காட்டன் ஒரு குறிப்பு எழுதியுள்ளார். அதாவது:

சுமார் 100 வருஷங்களுக்குப் பிந்திய காலத்தில் டக்காவில் இரண்டு லட்சம் ஜனங்களிருந்தார்களென்றும், ஒரு கோடி ரூபா பெறுமான முள்ள சாமான்கள் வருடந்தோறும் விற்பனையாகி வந்ததென்றும், வருஷத்தில் 30 லட்ச ரூபாய்க்கு இங்கிலாந்திற்கு மஸ்லின் ஏற்றுமதியாகி வந்ததென்றும், 1817ம் வருஷத்தில் அவ்வேற்றுமதி முற்றும் நின்றுவிட்டதென்றும், பல ஜனங்களுக்கு பிழைப்பிற்கு இடமாயிருந்த நூற்றல் தொழிலும் நெய்வுத் தொழிலும் நின்றுபோய் விடவே, ஸ்ரீமான்களாயிருந்தவர்கள் வயிற்றுப்பிழைப்பிற்கு நாட்டுப்புறங்களுக்குச் சென்றுவிட்டார்களென்றும், 18[illegible]0ம் வருஷத்தில் 79 ஆயிரம் ஜனங்களே தானிருந்தார்களென்றும் டக்காவில் மாத்திரமன்று இதர ஜில்லாக்களிலும் அப்படியேயென்று குறிப்பிட்டிருக்கிறார்.

மகா ஜனங்களே! நமது கைராட்டினமும் கைத்தறியும் குறைந்து போனதினால் டக்காவில் மட்டும் 73 வருஷங்களுக்குள் ஒரு லட்சத்து இருபத்தொராயிரம் ஜனங்கள் வெளியேறி விட்டார்களென்றால், நாட்டின் மொத்தம் ஜனத்தொகை விகிதாசாரப்படி எவ்வளவிருக்குமென்பதை யூகித்துக்கொள்ளவேண்டும்.

கைராட்டினத்தையும் கைத்தறியையும் புனருத்தாரணம் செய்யவேண்டுமென்பது சரியான யோசனையா? அதை பொருதொழிலாக அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரக்கூடுமா? நமக்குத் தேவையான வஸ்திரங்களை நாம் அந்த நூலைக்கொண்டு செய்து கொள்ளவியலுமா? அதன் பலனாக நமது வறுமை தீருமா? என்று யோசிப்பவர்கள் மேற்சொல்லிய விஷயங்களையெல்லாம் கவனித்துப் பார்க்கட்டும். ராதாகுமுதமுக்கர்ஜி, ரமேசசந்திரதத்தர் இவர்கள் எழுதிய சரித்திரங்களைப்படித்துப் பார்க்கட்டும். அவைகளை நமது பாடசாலைகளில் பாட புத்தகங்களாக வைக்கட்டும்.

கனவான்களே அடிகள் சொல்வதைச் சரியென்று உலகமே ஒப்புக்கொள்ளுங் காலம்வந்து கொண்டிருக்கிறது. அம்மணி [illegible] முட்டுக்கட்டை போடுவேனென்று சட்டசபைக்குள் தட்டுக்கெட்டு நிற்கும் [illegible] பட்டம் பதவி மோகத்தை விட்டொழித்து. மகாத்மாவைப் பின்பற்றி வருவார்களானால் நாட்டின் வறுமையின்றே விலகுமென்று நம்பலாம்.

நாமும் வறுமை யென்னும் வாளா விராமல் வறுமைப் பிணிபகற்றும் மருந்து, கதர், தீண்டாமை, மதுவிலக்கே என்ற மகாத்மா காந்தி முதலிய திட்டங்கள் நிறைவேற நாமொவ்வொருவரும் [illegible] செய்யவேண்டும்.

நமது தென்னாட்டிற்கும் மகாத்மா காந்தி சமீபத்தில் வரப்போகிறார். நாமும் அவர்களை அன்புடன் வரவேற்கும் பாக்கியம் பெற முடியாமல் அவர் பிரயாணத்தில் சில சிக்கல்களேற்படக்கூடியிருக்கிறார்கள். ஆயினும் அவரை வரவேற்று உபசரிப்பதைப்பார்க்கிலும் அவர் உபதேசப்படி நடப்பது, நடக்க முயல்வதுமே, பாவமாயும் நடக்கச் சப்வதே அவருக்கு மரியாதையும் மேலான உபசரிப்புமாயிருக்குமாதலால், நன்பத்தீர்க்க தீபாவளி நாளில் புதுவஸ்திரங்கட்டிக்கொண்டாடுவதுபோல நமது தென்பத்தீக்கவரும் மகாத்மா காந்தி நமது நல்லதெல்லைக்கேனும் வந்திறங்கும் அந்நாளைநன்னாளாக்கக் கருதி எல்லோரும் கதர் அணிந்து மகாத்மாவை மனதில் தியானிப்போமாக.

---

பார்ப்பன புரோகித பகிஷ்காரம்:—சென்னையிலிருக்கும் திருவாலங்காடு ஸ்ரீமான் கிருஷ்ணசாமி முதலியார் தமது குமாரத்தி கல்யாணத்தை 4-4-27ல் நடத்திய இதில், பார்ப்பன புரோகிதரை நீக்கி சென்னை சாலைவிநாயகர் ஆலய அர்ச்சகர் ஸ்ரீமான் முனிசாமி ஓதுவாரைக்கொண்டு நடப்பித்தார் என ஸ்ரீமான் டி. பாலசுப்ரமணிய முதலியார் அறிவிக்கிறார்.

ஒரு பெரியாரின் மரணம்:-கொளும்பு ஸ்ரீமான் பெ. பெரி. சுப்பிரமணியஞ் செட்டியார் அவர்களின் அருமைத்தந்தையார் பங்குனி மீ 1[illegible]-வ ஆவிவிளிப்பட்டியில் காலஞ்சென்றுவிட்டதைக் கேட்டு மிக வருந்துகிறோம்.

3-வது தமிழ்ச் சித்த வைத்திய மகாநாடு கா[illegible]:—இம்மகாநாடு மதுரையில் திருமலை நாயக்கர் மாலில் ஏப்ரல் மாதம் 10-ந் தேதி முதல் 14-தேதிவரை மந்திரி கனம் திவான் பஹதூர் ஆர். என். ஆரோக்கியசாமி முதலியாரவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடை பெறும். உத்தமபாளையம் திருவாளர் எம். டி. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் வரவேற்புபத்திரம் வாசிப்பார். தலைவரின் முகவுரைப் பிரசங்கத்தின் பின்னர் கனம் கேப்டன் ஸ்ரீநிவாசமூர்த்தி பி. ஏ. பி. எல். எம். பி. சி. எம். அவர்களால் கண்காட்சி திறந்து வைக்கப்படும். சங்க அமைச்சரால் அறிக்கை படிக்கப்பட்டு முதல் நாள் கூட்டம் கலையும். 2வது, 3வது, நான்காவது நாட்களில் மருந்தாராய்ச்சி, மூலாராய்ச்சி, வைத்தியம் பற்றிய பிரசங்கங்கள் நடை பெற்றபின்னர், பட்டங்களும் சன்மானங்களும் தரப்படும். சித்தமருந்துக் கண்காட்சியை கனம் சென்னை இராஜதானி சர்ஜன் ஜெனரல் அவர்களே நேரில் வந்து பார்வையிடுவதாக வாக்களித்திருக்கிறார்கள். வைத்தியர்களும் வைத்தியாபிமானிகளும் வந்து மகாநாட்டைச் சிறப்பிக்குமாறு வரவேற்புத்தலைவர், சங்கத்தலைவர், சங்க அமைச்சர் ஆகியவர்கள் வேண்டிக்கொள்ளுகிறார்கள்.

## விருதுபட்டி கடிதம்.

விருதுபட்டி
1—4—27

தமிழ்நாட்டு முடிசூடா மன்னன் வைக்கம் வீரர் அவர்களுக்கு எழுதியது.

ஐயா,

சின்னாட்களுக்கு முன் தாங்கள் "குடி அரசில்" விருதுநகர் முனிசிபாலிடியைப் பற்றி தப்பான எண்ணங்கொண்டு, ஈரோடு முனிசிபல் சேர்மேனுக்கு விருதுபட்டியில் ஓர் தம்பி என்று எழுதியிருக்கிறீர்கள். அதில் மூன்று விஷயம் குறை கூறப்பட்டது. முதலாவது டோலகேட் எலம் குறைந்து போனதால் சேர்மென பிரதி பிரயோசனம் வாங்கிக்கொண்டு அப்படி செய்தார் என்பது:—

இவ்விடம் பக்கத்தில் மழை கிடையாது வெள்ளாமை கிடையாது தாய் போன்ற வெள்ளாமையாகிய பருத்தி மோசம்பண்ணிவிட்டது. தவிர சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர் ராஜபாளையம வழியாக தென காசிவரையும் ரயில்போட்டு அந்த மாதம் ரயில் திறக்கப் போகிறார்கள். தற்சமயம அவ்விடம் சுற்றுப் பக்கத்திலிருந்து சட்டைவண்டி மார்க்கமாக வந்த சரக்கு இனி ரயில்மார்க்கம்தான் வரும். தவிர 41-ஆயிரம் ரூபாய் எலத்துக்கு சென்ற வருஷம் எடுத்த ஆசாமிக்கு அதிக நஷ்டம் ஏற்பட்டது. அதை முன்னிட்டு எலம் குறைந்து போயிருக்கிறது. மூன்று மாத காலமாக எலம் விடப்படும் என்று விளம்பரம் செய்தும் தூங்கி விழித்தவர்கள் போல் தெரியாது, தெரிந்திருந்தால் 41 ஆயிரம ரூபாயிக்கு எலம் எடுப்பேன் பது வீண் புரளி.

அடுத்தது. முனிஸிபல் ரோட்டிற்காக வாங்கிய நிலத்தில் 50 ரூபாய் வாங்கிக் கொண்டு புகையிலை பயிர்செய்யச்சொன்னதாக புகார்.:—

அதாவது மண்டலைநாடார் காடு முத்துமாரி நாடார் என்பவர் 5 வருஷம் குத்தகைக்கு எடுத்தார், அந்தக்காட்டில் ஓர் ஓரமாக ஒரு பாகம் ரோட்டுக்காக வாங்கியது முத்துமாரி நாடாருக்கு தெரியாமல் சேர்த்து உழுது பயிர் செய்தார். பிறகு தெரிந்து எடுக்கும்படி செய்ததற்கு வெள்ளாமையை அடுத்து விட்டார். 6000 (ஆறு ஆயிரம்) பாத்தி கொண்ட செடி புகையிலை காட்டுக்கு வருஷம 1-க்கு 27 ரூபாய் குத்தகைக்கு நிலத்துக்கு சொந்தக்காரர் விட்டிருக்கிறார். முனிசிபல் ரோட்டுக்காக வாங்கிய நிலத்தில் 69 பாத்தி புகையிலை வெள்ளாமை செய்திருக்கிறது. அதற்கு எவ்வளவு தொகை கொடுத்திருப்பது என்பதை நீங்களே யோசித்துப்பாருங்கள். அதற்குமாறாக சவரிமுத்து நாடார் என்பவரை சேர்மனுக்கு 50 ரூபாய் கொடுத்து நிலத்தில் பயிர் செய்ததாகச்சொல்லச் சொன்னார்கள். விசாரணைக்கு வந்த கலெக்டர் முன்னிலையில் அப்படிச் சொன்னார். செடி காட்டுக்கு எல்லை விபரம் கேட்டதற்கு தெரியவில்லை எத்தனை பாத்திகொண்டு என்று கேட்டதற்கு தெரியாது என்றார். தண்ணீர் செடி காட்டுக்கு எந்த திசையிலிருந்து எந்த திசைக்குப் போகிறது என்று கேட்டதிற்கு, மேற்கு இருந்து கிழக்கே போகிறது என்றார் தண்ணீர் வடக்கேயிருந்து தெற்கே போகிறது. ஆகையால் கலெக்டர் நேரேபோய் அதைப் பார்த்தார்.

மூன்றாவது:— மகமதிய ஸ்கூல் கட்டுவதற்கு முன் முகதுசாமி அய்யர் சேர்மனாக இருக்கும்போது சாங்ஷன் ஆனது இப்போது கட்டி முடிந்தது. விஷயம் இது தான் இதற்குமாறாக "திராவிடன்" பத்திரிகையில்பிரசுரம் ஆனதை நம்பி நீங்கள் மோசம் போய்விட்டீர்கள்.

இவ்வூர்கவுன்சிலில் பிராமணர்கிடையாது. சுயராஜ்யக்கட்சிக்காரர்கள் ஒருவரும் கிடையாது மகாத்மா காந்திபடம திறந்து வைத்ததற்காக முனிசிபல் கவுன்சிலர்களை சுயராஜ்யக்கக்ஷி அல்லது காங்கிரஸ் கக்ஷி என்று எப்படி சொல்ல முடியும்? திராவிடன், ஜஸ்டிஸ் பத்திரிகைகள், சுயராஜ்ய கக்ஷிகாரர், காங்கிரஸ் கக்ஷிக்காரர்கள் என்று ஓயாது வசைமொழிகளால் அலங்காரம் செய்து வருவதால் இந்நகர்க்கு வரும் போது மகாத்மா அவர்களுக்கு அட்ரஸ் வாசித்துக்கொடுக்க முனிஸிபல் கவுன்சிலர்கள் முன் வரப் பயப்படுகிறார்கள் இவ்வூரில் 2-கக்ஷி ஒன்று சேர்மன கக்ஷி, மற்றொன்று மாஜிசேர்மன் கக்ஷி. இவர்களின் இருகக்ஷிக்காரர்களுக்கும், வாது, பொய், மோசம் இவைகளில் மகா நிபுணர்கள் இவர்கள் பேச்சைக்கேட்டு 'திராவிடன்' 'ஜஸ்டிஸ்' கூத்தாடுகின்றன தாங்கள் 'குடி அரசு'க்கு கெட்ட பெருக்கு மாசு ஏற்படுகிறது. இவ்விடத்தில் சேர்மன் கக்ஷிகளில் சுயராஜ்யக கக்ஷியும், ஜஸ்டிஸ் கக்ஷியும் உண்டு. அதுபோல் மாஜி சேர்மன்கக்ஷியிலும் சுயராஜ்யக்கக்ஷியும், ஜஸ்டிஸ் கட்சியும் உண்டு. ஆனால் சுயராஜ்யக்கக்ஷிக்கும், ஜஸ்டிஸ் கட்சிக்கும் இவ்விடத்தில் வாதம் நடக்காது சேர்மன் கக்ஷிக்கும மாஜி சேர்மன் கக்ஷிக்கும் வாதம நடக்கும் இதுதான் உண்மை இதை தங்களுக்கு தெளிவாக எடுத்து சொல்ல எண்ணினேன். தாங்கள் இன்ன இடத்தில் இருக்கிறீர்கள் என்பதைச் சொல்லாமல் இல்லாத இடத்தைச் சொல்லி ஏமாற்றி விட்டார்கள். முடிவில் தாங்கள் ரயிலுக்கு போய்விட்டதாக தெரிந்து, இக்கடிதம் எழுதி இருக்கிறேன்.

என். சந்தசாமி

---

தங்கப்பதக்கம்:— 'தீண்டாமை' என்பதைப் பற்றி எளிய நடையில் தனித்தமிழில் 4 பக்கங்களுக்கு அதிகப்படாமல் எழுதப்படும் முதல் தர வியாசத்திற்கு ஒரு பவுனில தங்கப்பதக்கம் பரிசளிக்கப்படும். வியாசங்கள் 30—4—27க்குள் ஆசிரியர் 'விநோதினி' வேப்பேரி, சென்னை என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டுமென விநோதினி ஆசிரியர் அறிவிக்கிறார்.

குலகுருவைக்கொண்டு நடத்திய திதி:-கும்பகோணம நாயுடு குலத்தவரும், பிரபல கன்ட்ராக்டருமான ஸ்ரீமான் வேணுகோபால் நாயுடு தன் தந்தையின் வருஷாந்திர சடங்கை சுயமரியாதையைக் கருதி பார்ப்பனரை நீக்கி தன் குலக்குருவை வைத்துக் கொண்டு டை சடங்கை நடத்திவைத்தார் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## சிங்கப்பூர் கடிதம்

"குடி அரசு" கொள்கையைப் பரப்புவதற்கும் "குடி அரசு" பத்திரிக்கைக்கு சந்தா சேர்ப்பதற்கும் 13-3-27-தேதியில் நானும் எனது நண்பர்களான ஸ்ரீமான்கள் S. கோபால், G. ராஜகோபால், R. D. கோவிந்தசாமி, K. வெங்கடாசலபதி, R. சுந்தரராஜுலு, G. சாரங்கபாணி ஆகிய ஆறு கனவான்கள் ஜோகூர் என்ற ஊருக்குப் போனதில், அங்குள்ள பிரபலஸ்தர்களாகிய ஸ்ரீமான்கள கனம் K. வீரப்ப செட்டியார், R M.S.T.V. சின்னையாபிள்ளை, A.S A N. கல்லய்யா பிள்ளை, K கூத்தப் பெருமாள் வாண்டையார் ஆகிய நாலு கனவான்களும் எங்களை அன்புடன் வரவேற்று எங்களுக்கு 64 சந்தாதாரர்கள் வரை சேர்த்து கொடுத்ததோடு "குடி அரசி"ன் கொள்கையை முழுமனதுடன் ஆதரிப்பதாகவும், தங்களுக்கு இக் கொள்கையை இந்நாட்டில் பரப்ப வேண்டிய பிரசாரம் செய்வதற்காகவும வேண்டிய ஆதரவளிப்பதாகவும வாக்களித்தார்கள் கனம் கூத்தப் பெருமாள் வாண்டையார் அவர்கள் தன்னுடைய மோட்டார் வண்டியை உதவி வேண்டிய ஆதரவும அளித்தார் நாங்கள் சென்ற விடங்களில் எல்லாம "குடி அரசி"ன் கொள்கைகள் தாண்டவமாடுவதைக் கண்டோம். அதோடுகூட அங்கே சந்தா தாரராயச் சேரும போது, சென்னை மாகாணத்தில் இருந்து அநேக பார்ப்பனர்கள் இவ்விடம வந்து பத்திரிகைகளுக்கு சந்தா சேர்த்துக்கொண்டு போய் பத்திரிகைகள் அனுப்பாமல் ஏமாற்றி விட்டதையும சொல்லி வருந்தப்பட்டார்கள். அல்ல மலும சென்னைமாகாணத்தில் உள்ள பார்ப்பனரல்லாதார பத்திரிக்கைகளும "குடி அரசி"ன் கொள்கைகளைப் பரப்ப முயற்சிக்க வேண்டும என்றும் வேண்டினார்கள். இனியும் நாங்கள் பிரசாரத்திற்கும, சந்தாதாரர் சேர்க்கவும போகுமிடங்களில் உள்ள கனவான்கள் எங்களுக்கு வேண்டிய உதவி செய்து ஆதரவளிக்க வேண்டுமாய் கோருகிறேன என்று சிங்கப்பூர் ஜி. சாரங்கபாணி நாயுடு எழுதுகிறார்.

---

பார்ப்பனிய மொழிந்த திதி:—மதுரை மகாநாட்டின தீர்மானத்தையும், புரோகித பகிஷ்கார சங்க நோக்கத்தையும் அநுசரித்து சென்னை 'குடி அரசு' ஏஜெண்டு ஸ்ரீமான் வி முருகேச முதலியார், தனது பாட்டனார் வருடாந்தரத் திதியைப் பார்ப்பனரில்லாமல், பார்ப்பனரல்லாத ஏழைமக்களுக்கு அன்னமளித்து அன்று காரியங்களை நடத்திவைத்தாரென நமக்கு அறிவிக்கிறார்.

---

வட ஆர்க்காடு ஜில்லா தேவஸ்தானக் கமிட்டி பிரசிடெண்ட் தேர்தல்:— 1-4-27 தேதி நடைபெற்றது. ஜஸ்டிஸ கக்ஷியின் சார்பாக ராவ் பஹதூர் கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும், காங்கிரஸ் கக்ஷியின் சார்பாக ஸ்ரீமான் அய்யாதுரை முதலியார் அவர்களும் அபேக்ஷகர்களாக நின்றார்கள். ஸ்ரீமான் நாயுடுகாருக்கு 5 வோட்டுகளும், ஸ்ரீமான் முதலியாருக்கு 1 வோட்டும் கிடைத்தபடியால், ஸ்ரீமான் நாயுடுகார் பிரசிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்பட்டார் என ஒருநிருபர் அறிவிக்கிறார்.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

அடுக்கடுக்காக வெளிப்படும், அக்காலத்தில் நமதுயிரனைய காங்கியடிகள் இருந்திருந்தாலும் அவர்கட்கு நல்லுணர்வும், சாந்தியும் நணுகியிராவே. அந்தமாயிலே வந்த இவர்க்கு வாய்மையுந் தூய்மையும் எப்படி வரும்? வன்மையும் எப்படி வரும்? ஆகலால் அன்பார்ந்த சகோதரிகளே! சகோதரர்களே! மெய்யறியாப் பொய்யர்களாகிய விப்பிரர் தப்புவழியை மேவாது எல்லார்க்கும் ஒப்பக்கூடிய செப்பமான வழியிலே சென்று சிறப்புற வாழ்வதே செந்தமிழ் நாட்டார்க்குரிய கடமையாம். நமக்கு எவ்வாற்றானும் பந்தக்கேடுதரும் மந்திரங்களை அந்தகர்க்கே விட்டுத் தொலைத்து சொந்தமறிகொண்டு தம்மானங்காத்து, தம் எல்லாருஞ் சூழ்ந்து நெருங்கி வாழ்வதே சால்புடையதாகும். பொதுமறையாகிய உத்தர வேதம், காலத்தினாலும், இடத்தினாலும், மதத்தினாலும், சாதியினாலும் வாதிக்கப்படாத சத்திய மந்திரங்கள் அடங்கிய தனித்தமிழ்மறை. அதைக்கைக்கொண்டு வாழ்நாள் கழிப்பவன் வீழ்நாள் கழிப்பவன் ஆகமாட்டான். அந்நூல் கருவிநூலாகும். அறிவுநூலாகும், நீதிநூலாகும், அருள்நூலாகும். தேவாரம் திருவாசகம் முதலிய பன்னிரு திருமுறைகளும் திருவாய்மொழியும் அன்பு மந்திரங்கள் அடங்கிய மெய்நெறி வேதங்களாகும். அவற்றை ஓதினால் ஏதங்கெட வாழலாம். எல்லாம் இனிதாகவே முடியும். இறைவன் அருளும் எளிதிலே கைகூடும். கைகூடும்.

---

தூக்கநாயக்கன்பாளையத்தில் சுப்பிரமணியர் பங்குனி உத்திர மகோத்சவம்:

தூக்கநாயக்கன் பாளையத்துக்கும் கொங்கர்பாளையத்துக்கும் மத்தியிலுள்ள குமாரமலைக்குன்றிலுள்ள ஷை சுவாமியின் பங்குனி உத்திரத்திருவிழா 18-3-27 தேதியன்று அதி சிறப்பாக ஸ்ரீமான் டி. என் பெருமாக்கவுண்டர் அவர்களால் நடத்தி வைக்கப்பட்டது.

திருவிழாவிற்கு வந்திருந்த சுமார் 4000 ஜனங்களுக்கும் தன் சொந்த செலவிலேயே சமாராதனை போஜனம் செய்வித்து கூடியிருந்தவர்களை திருப்தியடையச் செய்தார் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## இடம் மாறுதல்.

திருச்சியில், அகில பாரத சர்க்கா சங்கத்தின் கிளை வஸ்திராலயமாகிய தமிழ் நாடு காங்கிரஸ் கதர் டிப்போ, பெரிய கடைத் தெருவின் கீழ் பக்கம் இதுகாறும் இருந்து வந்தது. இன்னும் சிறிது அதிகமான வசதியை எண்ணி இது பொழுது மேற்படி பண்டகசாலையை (மேற்கு பக்கத்தில்) எதிரில் மூன்று கடைகட்குத் தெற்கில் மாற்றப்பட்டிருக்கிறது. சுத்தக்கதர் வேண்டுவோர் இம்மாறுதலை ஊன்றி கவனித்து "தமிழ் நாடு காங்கிரஸ் கதர் டிபோ"விற்கே வந்து கதர் வாங்க வேண்டுகிறேன்.

தங்கள்,

வே. வே. துரைசாமி காரியதரிசி

## அறிவிப்பு.

நமது பத்திரிகைக்கு சந்தாதாரர்கள் நேரிலேயும், சில அன்பர்கள் மூலமாயும் சேர்ந்து வருகின்றார்கள். அது பற்றி மிக்க சந்தோஷம். முக்கியமாக சில அன்பர்கள் இதற்காக மிக ஊக்கங்கொண்டு சந்தாநேயர்கள் அடிக்கடி சேர்த்துக் கொடுத்து வருவதற்காக எமது நன்றியறிதலையும் வந்தனத்தையும் செலுத்துகின்றோம். ஆயினும் மேற்படி அன்பர்கள் எவ்வளவு ஊக்கமாகவும் உற்சாகத்துடனும் சேர்த்துக்கொடுக்கின்றார்களோ அவ்வளவு அன்புடனும் ஆதரிப்புடனும் பெற்றுக்கொள்ளும் பேப்பரை எவ்வித தடையினாலோ, காரணத்தாலோ அச்சந்தாதாரர்களுக்கு சந்தாத்தொகைக்காக அனுப்பப்படும் வி. பி. பத்திரிகையில் சில திரும்பி வந்து விடுகின்றன. அது பற்றி மிக வருந்துகின்றோம். நிற்க, மேற்கண்ட விதமாய் வி. பி. பத்திரிகைகள் திரும்பி வருவதால் தபாலாபீஸ்காரர்கள் எங்களை நாங்கள் சந்தாதாரர்களின் அநுமதியின்றியும், ஆர்டரின்றியும் பத்திரிகையை வி. பி. மூலம் அனுப்புவதால் வி. பி. திரும்பி வருகின்றனவென்றும், இனி மேல் பத்திரிகை அம்மாதிரி ஆர்டரின்றி வி. பி. யில் அனுப்பப்பட்டால் ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் எமது ஆபீசுக்கு மதராஸிலிருந்து உத்தரவு அனுப்பியிருக்கின்றார்கள். நாம் தபால் ஆபீஸ்காரர்களின் பேரில் குற்றம் சொல்வதில் பயனில்லை. அவர்கள் அவர்களது சட்டப்படி சொல்லுகின்றார்கள். ஆகையால் சந்தாதாரர்கள் தயவு செய்து இனிமேல் சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்பிக் கொடுப்பதுமன்றி சந்தாதார் சேர்த்துக் கொடுக்கும் நமது அன்பர்களும் பத்திரிகை அபிமானிகளும் சந்தாதாரர்களை நேரிலே சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்புவிக்குமாறு செய்யும்படி வேண்டுகின்றோம். அப்படியல்லாது சந்தாதாரர்களை வி. பி. அனுப்பச் சொல்வதாயிருந்தாலும் தயவு செய்து வி. பி. வந்தவுடன் அங்கீகரித்துப் பத்திரிகையை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். சந்தாதாரர்கள் யாவருக்கும் எமது மனமார்ந்த வந்தனம்.

மானேஜர்.

"குடி அரசு" ஆபீஸ்.

---

சென்னை மாகாண தபால்காரர் சங்கம் ஈரோடு கிளையின் 20—3—27 தேதி கூடிய கூட்டத்தின் தீர்மானங்கள்:—

தபால்காரர்களுடையவும், கீழ்தர உத்தியோகஸ்தர்களுடையவும் கஷ்டங்களை நிவர்த்திக்க ஆங்காங்கு தபால்காரர் யூனியன்கள் ஸ்தாபித்து, டெல்லியில் இது விஷயமாக சர்க்கார் அங்கத்தவரை பேட்டி கண்டு குறைகளை எடுத்துக் கூறிய சென்னை ஸ்ரீமான் வி. பாலசுப்பிரமணியம் அவர்களைப் போற்றுகிறார்கள்.

நமது குறைவுகளை நிவர்த்தித்து சம்பளம் உயர்த்தப்பட வேண்டுமென்று டெல்லி சட்டசபையில் தீர்மானங்கள் கொண்டு வந்த நமது ஜில்லா பிரதிநிதி ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் பி. ஏ. பி. எல். எம். எல். ஏ. அவர்களுக்கும் அவரை ஆதரித்துப்பேசிய மற்றைய கனவான்களுக்கும் இச்சங்கம் நன்றி செலுத்துகிறதுடன் சம்பள உயர்வு விஷயமாய் இன்னும் வாதாடும்படியாகவும் சபை அங்கத்தவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

சம்பள உயர்வு பம்பாய், கல்கத்தா, பர்மா முதலிய மாகாணங்களில் இவ்வருஷமே அமுலுக்குக் கொண்டு வந்து விட்டபடியால் அடுத்த வருஷத்திற்குள்ளாகவே கிளர்ச்சி செய்து நம் மாகாணத்திலும் சம்பள உயர்வு அமுலுக்கு வர வேண்டுமென்று எல்லா அங்கத்தவர்களும் அபிப்பிராயப்படுவதுடன் ஏப்ரல் மாதத்தில் ஈரோட்டில் ஒரு மஹாநாடு நடத்த வேண்டுமென்றும் தீர்மானிக்கிறது என்று ஈரோடு போஸ்ட் மேன்ஸ் யூனியன் காரியதரிசி ஷேக் அப்துல் அஜீஸ் சாய்பு அறிவிக்கிறார்.

---

## ஆரணி யூனியன் போர்டு மகாத்மாவுக்கு உபசாரப்பத்திரம்.

ஆரணி யூனியன் போர்டின் மாதாந்திரக் கூட்டம் சென்ற 29—3—27 தேதி சேர்மேன் ஜனாப் அப்துல் சுக்கூர் சாயபு அவர்களின் தலைமையின் கீழ் கூடியது. மகாத்மாகாந்தி ஆரணிக்கு வரும் சமயம் அவருக்கு யூனியன் போர்டின் சார்பாக ஓர் உபசார பத்திரம் படித்துக் கொடுக்க வேண்டுமென்று ஸ்ரீமான் கே. எம். அண்ணாமலை செட்டியாரால் பிரேரபிக்கப்பட்டு ஸ்ரீமான் முத்துகுமாரப்ப செட்டியாரால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதுடன் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது. அதன் செலவுக்காக யூனியன் மெம்பர்கள் தங்கள் சொந்தத்தில் பணம் செலவழித்து உபசார பத்திரம் தயார் செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டதென ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

## குடி நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டுக் கிளையாரால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் எழுதப்பட்டுப் பிரசுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய கதர்ப்பத்திரிகை.

ஏழை மக்களும் படிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு வருட சந்தா ரூபாய் ஒன்று அல்லது 8000 கஜம் கைநூல் என்று தீர்மானித்திருக்கிறது.

சந்தாவை முன்னதாகவே அனுப்பவேண்டும். வி. பி. யில் அனுப்புவதில்லை. இதை எல்லோரும் ஆதரிக்கவேண்டுமாய்க் கோருகிறோம்.

மானேஜர்,
சர்க்கா சங்கம், ஈரோடு.

## "எலிப்ட"

எலிகள் தான் பிளேக் என்னும் தொத்து வியாதியைக் கொண்டுவருகின்றன. அவைகளை ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஓட்டவேண்டியது அவசியம். ஜீவகாருண்யத்தைக் கைக்கொண்டே எலிகளைக்கொன்று விடாமல் விரட்டுவதற்கென்று எலிப்ட் என்னும் மருந்து தயாரிக்கப்பட்டிருக்கிறது: விலை அணு 12.

மஸ்கிட்டோ ஆயில்:—கொசுக்கடியைத் தடுப்பதற்கு இந்த வாசனைத் தைலம் உபயோகிக்கப்படுகிறது. நித்திரைக்குப் போகும் போது இத் தைலத்தைசோக கை கால்களில் தடவிக்கொண்டால் கொசுக்கள் கிட்ட வராது.

புட்டி 1க்கு அணு 0—12—0

ராமய்யா எலக்ட்ரோ கெமிக்கல் ஒர்க்ஸ்
வீரவநல்லூர் (S. I R.)

## சந்தா நேயர்களுக்கோர் அறிவிப்பு.

நமது சந்தா நேயர்கள் தங்களுக்குப் பத்திரிகை சரிவர கிடைப்பதில்லையென்று அடிக்கடி நமக்கு கடிதம் எழுதிவருகிறார்கள். ஆனால் நாம் அவைகளைக் கவனிக்குங்காலத்தில் அன்னார்களுக்குப் பத்திரிகை கிரமமாகத்தான் அனுப்பப்பட்டு வருகின்றன. நாங்களும் ஆபீசில் ஒரு தடவைக்கு மூன்று தடவை விலாசங்களை கண்க்கிட்டு சரி பார்த்து அனுப்பிவருகிறோம். ஒருகால் மேற்படி சந்தா நேயர்களின் பத்திரிகைகளை அன்னார்களின் சிநேகிதர்களோ மற்றும் பந்துக்களோ பெற்றுக்கொண்டுதிருப்பிக்கொடுக்காமலிருக்கலாமோவெனச் சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. சந்தா நேயர்கள்தயவுசெய்து இனிமேல்எங்களுக்குக் கடிதம எழுதினாலும், சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்பினாலும் முழு விலாசத்தை விபரமாய் எழுதுவதுடன் சந்தா நெம்பரையும் குறித்தெழுதுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர், "குடி அரசு" ஆபீஸ்.

நமக்கேற்ற நவீனக நாவல் நாவலிற்சிறந்த நவீனக நாவல்

உங்கள் ஆர்டரை உடனே எழுதுங்கள்

அவாவரதிர்ஷ்டம் அறியலாமிதுநிஜம், ஆனந்த ரகசியம் அற்புத ஜோசியம்

அனைவரும் படித்து அதிசயிக்கக்கூடிய

**இரங்கூன் இரகசியம்.** ஓர் இனிய செந்தமிழ் நாவல்.

செந்தமிழ்ச் சகோதரர்காள்! எடுத்துப்படித்து முடிக்கும்வரை கீழே வைக்க மனமிராது. நாகரீகம், நவீனகம, புதினம், கற்பனை, கற்பிதம் முதலிய அலங்கிர்த மமைந்தது. அறிவை விளக்கி அகமகிழச்செய்வது. மோசம் நாசம் கம்பளி வேஷம் போடும் வயிற்றுப்பிழைப்பாளரின் சாமர்த்தியத்தை விளக்கிக்காட்டுவது. அந்நிய தேச ஜீவனும்ச கஷ்ட நஷ்டத்தின் பலனை போதிப்பது. சதிபதிகளின் சமூசார வாழ்க்கைத்துணை நலம் சாற்றுவது. பேராசை பெருநஷ்டமென்னும் புத்தி புகட்டுவது. மனகன் சஞ்சலத்தை நீக்கிச் சந்தோஷம் கொடுப்பது. மாயப் பரதேசிகள் வழிபறிக் கொள்ளைக்காரர்களின் வஞ்சகச்செயலை உள்ளங்கை நெல்லிக்கனிபோ லெடுத்துக்காட்டும் ஒன்றியமையாத இயல்புடைய முதல்தரமான நாவல். 200 பக்கம் அழகிய பிரிண்ட், அருமையான ராப்பர் பயிண்டு. புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 1—0—0· வி. பி. தபால்செலவு வேறு.

விலாசம்:—பஞ்ச சக்தி புத்தகசாலை,
தபால் பெட்டி P. கெ. 1051, 63, 29-வது கல்லி, இரங்கூன்

## அருப்புக்கோட்டை "நாடார்குல மித்திரன்" க்ஷேம நிதிதர்ம பண்டு லாட்டரிச் சீட்டு.

சீட்டு 1-க்கு ரூ. 1 வீதம் மொத்தம சீட்டுகள் 33000-க்கு 3381 பிரைஸ்கள்.

1-வது பிரைஸ் ரூ 3000, 2-வது பிரைஸ் ரூ. 1500, 3-வது பிரைஸ் ரூ 1000 4வது பிரைஸ் ரூ. 500, 5, 6-வது பிரைஸ் ரூ. ரூ 200.

100 ரூபாயில் 5 பிரைஸுக்கு ரூ. 500, ரூ. 50ல் 20-க்கு ரூ. 1000, ரூ. 20ல் 50க்கு ரூ. 1000, ரூ. 10ல் 100க்கு ரூ. 1000, ரூ. 5ல் 200க்கு ரூ. 1000, ரூ. 3ல் 600க்கு ரூ. 1800, ரூ 2ல் 2400க்கு ரூ. 4800. ஆக பிரைஸ் 3381க்கு ரூ. 17500, புக் 1500க்கு கமிஷன் ரூ. 3000, குமாஸ்தா சம்பளம் அச்சுக்கூலி, விசேஷ கமிஷன் ரூ 1800 தனிப்பிரைஸ் ரூ. 1700, பண்டுக்கு ரூ 9000 ஆக ரூ 33000

1. (4—5—1927) பிரபவ-௵ சித்திரை-மீ 22-௳ புதன்கிழமையன்று பிரைஸ் எடுக்கப்பெறும்.

2. 33000 சீட்டுகளுக்குமேல் விற்பனையானால் ஈவுப்படி பண்டுக்கும் செலவுக்கும்போக மீதித்தொகையை 4 ரூபாய் பிரைஸ்களாக எடுக்கப்பெறும். சீட்டு விற்பனை குறைந்தால் ஈவுப்படி குறைக்கப்பெறும்.

3· 1-வது பிரைஸ் முதல் 6-வது பிரைஸ்வரை விழுந்த புள்ளிகளிடமிருந்து முறையே 150, 75 50, 25, 10, 10 ரூபாய் சீட்டு விற்றவர்களுக்கு கமிஷன் பிடித்துக் கொடுக்கப்பெறும்.

4. பிரைஸ் விழுந்த புள்ளிகள் ஒரு மாதத்திற்குள் ரசீதை அனுப்பி பணம் பெற்றுக்கொள்ளவேண்டும். வெளியூர் புள்ளிகளுக்கு மணியார்டர் கமிஷன் கழித்து பிரைஸ் தொகையை அனுப்பப்படும்.

5. சகலவிதமான கடிதப் போக்குவரத்தும் ☞ ரூ. அ. முத்துசாமி நாடார் பத்திராதிபர், "நாடார்குல மித்திரன்" ஆபீஸ், அருப்புக்கோட்டை என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும். புஸ்தகம் விற்றவர்கள் தவிர மற்றவர்கள் ரிப்ளை கார்டு எழுதவேண்டும்.

ரூ ஆ. முத்து நாடார், பத்திராதிபர்.

## திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும் தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.


(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)




பெட்ரோமாக்ஸ் லைட்.

லைடகள், மாண்டில், டூம், தனித் தனி சாமான் யாவும் விலையமாய் கிடைக்கும். கியாட்லாக் இனாம்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

இனாம்! இனாம்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனாம்.




எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன் பேனாஇனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

## காம கற்பம்.

நாதுபுஷ்டிக்கு மிக்க உயர்ந்தது. அனுபவத்தில் அறியலாம். விலை ரூ. 1-தான்.

S K. வரதராஜுலு நாயுடு
கமிஷன் ஏஜண்டு, திருச்செங்கோடு (S.I.)

ஸ்ரீமதி நாகம்மாள்வர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.